வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# மட்டு. ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.12.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 05 | பக்கங்கள் : 16




# இந்திய மத்தியஸ்தத்தை கோருவதா? தீர்க்கமான முடிவு இன்று எடுக்கப்படும்!

## தமிழ் கட்சிகள் கொழும்பில் கூடுகின்றன

யாழ்ப்பாணம், டிசெம்பர் 13

இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்துடன் நடத்தப்படும் பேச்சில் இந்திய மத்தியஸ்தத்தைக் கோருவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் இன்று செவ்வாய்க்கிழமை பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரியவரு 15 கிறது.

## 3 வயது மகள் துஷ்பிரயோகம்! கைதான தந்தைக்கு மறியல்!!

வடமராட்சி, டிசெ. 13

போதைப் பொருளுக்கு அடிமையான தந்தை ஒருவர் தனது மூன்று வயது மகளை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி - பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற 15

## இந்தியா தலைமையில் 4 நாடுகளின் மேற்பார்வையை வலியுறுத்துவோம்!

### ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்

வவுனியா, டிசெ. 13

ஜனாதிபதியுடனான பேச்சு தொடருமானால் இந்தப் பேச்சில் இந்தியாவின் தலைமையில் அமெரிக்கா, பிரித்தானியா, கனடாவின் மேற்பார்வை அவசியம் என்பது எமது பிரதான கோரிக்கையாக இருக்கும். இல்லாவிட்டால் எம்மை வைத்து தங்கள் நலனை பார்க்கும் - பாதுகாக்கும் பேச்சாக இது அமைந்துவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளு மன்ற செல்வம் 15

## ஈ. பி. டி. பி உறுப்பினர் வாள்களுடன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 13

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் நேற்று வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை - சங்கரத்தை 15

## உள்ளூராட்சி தேர்தலை நடத்த உத்தரவிடுமாறு கோரி வழக்கு!

கொழும்பு, டிசெ. 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம் .ஏ. சுமந்திரன் மற்றும் ரஞ்சித் மத்துமபண்டார, லக்ஷ்மன் கிரியெல்ல, அநுர பிரியதர்ஷன யாப்பா, ஜீ.எல்.பீரிஸ், தயாசிறி ஜயசேகர ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (ஐ)

### இனப் பிரச்னை தீர்வு பேச்சு:

## சகல கட்சிகளையும் இன்று சந்திக்கின்றார் ஜனாதிபதி



கொழும்பு, டிசெ. 12

இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் பேச்சுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களை இன்று சந்தித்துப் பேசுகிறார்.

இந்தச் சந்திப்பின்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரசன்னத்துக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் 15

## இளைஞனின் உயிரை பறித்தது ஹெரோயின்!

மன்னார், டிசெ. 13

ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

மன்னார் பள்ளிமுனையை சேர்ந்த குறித்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் மன்னார் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந் தார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஹெரோயின் 15





## யாழ். - சென்னை விமான சேவை 33 மாதங்களின் பின்னர் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணம் - சென்னை இடையிலான விமான சேவை சரியாக 33 மாதங்களின் பின்னர் நேற்று ஆரம்பமானது.

சென்னையிலிருந்து வந்த முதலாவது விமானம் நேற்று முற்பகல் 11.35 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கியது. இந்த விமானத்தில் 14 பயணிகளும், 14 விருந்தினர்களுமாக 28 பேர் வருகை தந்தனர்.

இவர்களை சுற்றுலா இராஜாங்க அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் 15

## தமிழரசு கட்சி தனித்து சென்றாலும் கூட்டமைப்புத் தொடர்ந்து இயங்கும்!

### பங்காளிக் கட்சிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கை தமிழரசு கட்சி தேர்தலில் தனித்து போட்டியிட்டாலும், ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே செயல்படும் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது. இதில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிக ஆசனங்களை பெறும் நோக்கில் தனித்துப் போட்டியிடுவது குறித்து தொழில்நுட்ப ரீதியாக ஆராயப்பட்டதாக தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிடுவது குறித்து 15

## 1,660 கால்நடைகள் உயிரிழந்தன!

கொழும்பு, டிசெ. 13

கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரத்து 660 கால்நடைகள் உயிரிழந்தன என்று விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு 15

## வடக்கு உட்பட 4 மாகாண ஆளுநர்களை மாற்ற முடிவு!

கொழும்பு, டிசெ. 13

வடக்கு மாகாணம் உட்பட நான்கு மாகாணங்களுக்கு விரை வில் புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்துள்ளார் என்று அரசாங் கத்தின் உயர்வட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியமிக்கப்படவுள்ள நான்கு ஆளுநர்களில் முன்னாள் அமைச்சர்களும் அடங்குகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

நாட்டின் 9 மாகாணங்களில் 5 மாகாணங்களின் ஆளுநர் பதவிகளில் எந்த மாற்றங்களையும் செய்வ தில்லை என்று சிறீ லங்கா பொதுஜன 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

தமிழ் அரசியல் தலைவர்களுக்கு முக்கியமான ஒரு தகவலை சொல்லியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இனப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்காக என்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டியுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று மாலை நடைபெறவிருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளப்போவதில்லை என்பதையும் அவர் தெரிவித்துவிட்டார்.

தமது முடிவை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் ஒரு முக்கியமான செய்தியையும் சொல்லியிருக்கிறார்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் பலமுறை இலங்கை பொருளாதாரத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தினார்கள். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால், அரசாங்கம் இனப்பிரச்னை தீர்வுக்கு முயற்சிக்கும் என்பதால் புலிகள் அப்படி செயல்பட்டார்கள். புலிகள் எதை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தினார்களோ, அது இப்போதுதான் நடந்துள்ளது. இந்த சமயத்தில் தமிழ் மக்கள் தமது முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். பேச்சு ஆக்கபூர்வமாக இருந்தால், சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பற்றி ஜனாதிபதி சிங்கள மக்களிடம் பகிரங்கமாகப் பேச வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்கள். இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டால் தமிழ் மக்களின் இனப்பிரச்னை ஓர் எல்லையை தாண்டி எட்ட முடியாத இடத்துக்குக் கொண்டு செல்லப்படும் அபாயமுள்ளது. ரணிலின் அழைப்பை ஏற்று, நிபந்தனையின்றி பேச்சில் கலந்து கொண்ட தரப்புகள்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்' - இதுதான் கஜேந்திரகுமார் விடுத்துள்ள எச்சரிக்கை.

உண்மைதான், விடுதலைப் புலிகள் இருந்தபோது சாதாரண பலத்துடன் இருந்தவர்களல்ல. முப்படைகளுடன் இலங்கையின் ஒரு பகுதியை தமது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள். அவர்கள் இருந்த காலத்தில் நாடு இப்படியொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பது போரியல் ஆய்வாளர்கள் மட்டும் புரிந்துகொள்ளக்கூடியதல்ல.

நிராயுதபாணிகளாக ஜனாதிபதி செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டபோதே, வடக்கிலும் அப்படியொரு முற்றுகைப் போராட்டத்தை நடத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதும் தெரிந்ததுதான்.

ஆனால், புலிகள் எதிர்பார்த்த பொருளாதார நெருக்கடி இப்போது ஏற்பட்டிருப்பதால் சமஷ்டி தீர்வை பெற்றுவிடலாம் என்கிறார் கஜேந்திரகுமார்.

நேற்று சில நண்பர்கள் சந்தித்தோம். அவர்களில் தேசிய நாளிதழின் ஆசிரியராக இருந்த மூத்த ஊடகவியலாளரும் இருந்தார். அப்போது எங்களில் ஒருவர், கஜேந்திரகுமார் சொல்வது சரியானதுதான் என்ற தனது கருத்தைச் சொன்னபோது, அந்த மூத்த ஊடகர் கேட்டார், 'இதுநாள்வரை ஒரு நாடு இரு தேசம் என்று கூறிக்கொண்டிருந்தவர் அவர். அதாவது இது இலங்கை என்ற ஒரு நாடு. சிங்கள தேசம் தமிழ் தேசம் என்ற இரண்டு தேசங்கள் என்பதே அவரின் கொள்கை. ஆனால், இப்போது இந்த நாட்டில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டும் என்கிறார். அதாவது, அது எத்தனை தேசங்களானாலும் பரவாயில்லை. ஒவ்வொரு தேசத்துக்கும் சமஷ்டி அடிப்படையில் ஆட்சி வேண்டும் என்கிறார்.' என்றார்.

புலிகள் இருந்தபோது பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கும் இப்போது ஏற்பட்டிருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கு உதவவேண்டுமானால் இனப்பிரச்னைக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் நாடுகளும்கூட மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துங்கள், பதின்மூன்றை அமுல்படுத்துங்கள் என்றுதான் கேட்கின்றன. அதிகம் ஏன், ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட கடைசி தீர்மானமும் அதனைத்தான் வலியுறுத்தியது.

பேச்சுக்கு முதலே தெற்கின் எல்லா தரப்புமே ஒற்றையாட்சிக்கு வெளியே தீர்வு இல்லை என்ற தமது உறுதிப்பாட்டை தெரிவித்துவிட்டன. ஆனால், அதிகாரப் பகிர்வுக்கும் தயாராக இருப்பதாகவும் கூறுகின்றன.

மேலே கஜன் கூறுவதுபோல, இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டால் தமிழ் மக்களின் இனப்பிரச்னை ஓர் எல்லையை தாண்டி எட்ட முடியாத இடத்துக்குக் கொண்டு செல்லப்படும் அபாயமுள்ளது.

பேச்சுக்கு நிபந்தனை விதித்துக்கொண்டு அதனை புறக்கணிப்பது இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கு ரணிலுக்கு உதவுமே தவிர, வேறு எந்தவகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுக்கு அழைத்தால் அவர்கள் வருகிறார்கள் இல்லையே, என்று கூறிக்கொண்டே அந்த நெருக்கடியிலிருந்து நகர்ந்து செல்ல ரணிலுக்கு வழிவிடுவதாகவே அது அமைந்துவிடும்.

அதனை விடுத்து, பேச்சில் கலந்துகொண்டு இப்போது ஆகக்கூடியது எதனைப் பெறமுடியுமோ அதனைப் பெறுவதற்கு முயற்சிப்பதுதான், புத்திசாதுர்யமானது.!

**- ஊர்க்குருவி**

# நல்லூரில் சிறப்புற நடந்தது பாரதியார் பிறந்தநாள் விழா!









படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் பாரதியார் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில் கம்பவாரிதி இ. ஜெயராஜை நடுவராக கொண்டு "பாரதி நம் நெஞ்சில் ஆழப் பதிவது - சமூகப் பாடல்களாலா ஃ பக்திப் பாடல்களாலா" என்ற பொருளில் பட்டிமன்றம் இடம் பெற்றது. இதில் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன், கம்பநேசன் இ. வாசுதேவா, அதிபர் ந. விஜயசுந்தரம், செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்து கொண்டனர்.



நிகழ்வின் தொடக்கமாக நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா இயக்குநர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் பாரதி பாடல் நடனமும் இடம்பெற்றது. (ஐ)

# 24 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்!

யாழ்ப்பாணம், டிசெ. 13

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 24 இந்திய மீனவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவானால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா ஒன்றரை வருட சிறைத் தண்டனை என்ற நிபந்தனையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் இதுதொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே 24 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ஐந்து படகுகளைத் தொடர்ந்தும் தடுத்து வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டதுடன் அந்தப் படகுகளுக்கான உரிமை கோரல் வழக்கை எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த, நவம்பர் 28 ஆம் திகதி அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் குறித்த 24 பேரும் இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன், ஐந்து படகுகளும் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## வசந்த முதலிகே மறியலில்!

கொழும்பு, டிசெ. 13

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, சட்டமா அதிபரின் கருத்தை நீதிமன்றம் பெறும் வரை கொழும்பு மேலதிக நீதவான் தரங்க நில்மினி மஹவத்த அவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ)







அலையன்ஸ் பினான்ஸ் கோ தனியார் நிறுவனம் யாழ்ப்பாண கிளையை திறந்து வைத்ததுடன், இடமாற்றப்பட்ட சுன்னாக கிளையையும் அண்மையில் திறந்து வைத்தது. இந்த இந்த நிகழ்வுகளில் நிறுவனத்தின் பிராந்திய தலைவர் நிஷாந்த் செல்வரத்தினம் மற்றும் தங்க கடன் பிரிவின் தலைவர் சுரேந்திர ரொட்ரிகோ சிரேஷ்ட நிர்வாகத்தின் கிளை ஊழியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஈழநாடு
Eelanadu
13.12.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழரசு கட்சி கூறுவதென்ன?

உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டிடுவது தொடர்பில் தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் ஆராயப்பட்டிருக்கின்றது. தமிழரசு கட்சி தனித்துச் செல்வதென்பது அவர்களின் முடிவென்று பங்காளிக் கட்சிகள் தெரிவித்திருக்கின்றன. உள்ளூராட்சி தேர்தலொன்று தொடர்பில் பேசப்பட்டுவரும் சூழலில்தான் தமிழரசு கட்சியின் தலைமை இவ்வாறானதொரு செய்தியை வெளியிட்டிருக்கின்றது. பங்காளிக் கட்சிகள் வெளியிலிருப்பவர்களையும் இணைத்துக் கொண்டு செல்ல வேண்டுமென்று கூறிவரும் நிலையில் தமிழரசு கட்சியின் மேற்படி அறிவிப்பு பலவாறான கேள்விகளை முன்வைக்கின்றது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவுகளை சந்தித்திருந்தது. இதற்கு தேர்தல் முறைமையும் ஒரு காரணமென்று பின்னர் கூறப்பட்டது. ஆனால், கூட்டமைப்பும் இணைந்துதான் இந்தத் தேர்தலை முறைமையை கொண்டுவந்தது. தற்போதுள்ள தேர்தல் முறைமையை மாற்றியமைப்பது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது. தற்போதுள்ள தேர்தல் முறைமையின் கீழ், இடம்பெற்றால் கூட்டமைப்பாக போட்டியிட்டாலும்கூட முன்னைய சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிடும். இந்த நிலையில் கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொரு கட்சிகளும் தனித்து போட்டியிடுமாக இருப்பது சாதகமானதா? அது மேலும் பின்னடைவுகளை ஏற்படுத்துமா? இந்த கேள்விகளுக்கு தமிழரசு கட்சியின் பதில் என்ன?

தமிழரசு கட்சி பங்காளிக் கட்சிகளின் செல்வாக்கை அளவிட முற்படுகின்றதா? ஏனெனில், தமிழரசு கட்சியினரை பொறுத்தவரையில் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் டி. பி. எல். எவ். (புளொட்) ஆகியவை, தனித்து செல்லுமாக இருந்தால் அவர்களால் பிரகாசிக்க முடியாது, வீட்டுச் சின்னத்திலிருக்கும் வரையில்தான் அவர்களால் அரசியலில் சீவிக்க முடியுமென்றே கருதுகின்றனர்.

இதன் காரணமாகவே ஒவ்வொரு தேர்தல்களின் போதும் வேட்பாளர்களை பிரிப்பதில் கட்சிகளிடையே முரண்பாடுகளும் இழுபறிகளும் ஏற்படுகின்றன. தமிழரசு கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாகவே ஏனைய கட்சிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் வழங்கிய வேட்பாளர்கள் நிராகரிக்கப்பட்டனர். இந்த பின்னணியில் நோக்கினால் உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிடுவதன் மூலம் பங்காளிக் கட்சிகளின் மக்கள் செல்வாக்கை தமிழரசு கட்சி நிறுத்துப் பார்க்க முற்படுகின்றதா?

உள்ளூராட்சி தேர்லை தனித்து போட்டியிடுவதில் பிரச்னையில்லை. ஒரு வகையில் ஒவ்வொரு கட்சிகளும் தங்களின் சொந்த செல்வாக்கு என்னவென்பதை உணர்வதற்கு இது பயன்படலாம். ஆனால், இதில் ஓர் ஆபத்தும் உண்டு. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் இந்தப் பரீட்சை தமிழரசு கட்சிக்கு சாதகமாக அமையலாம். ஆனால், அனைத்து இடங்களிலும் அவ்வாறான நிலைமையில்லை. குறிப்பாக, ஏனைய சமூகங்கள் வாழும் பகுதிகளில் – கிழக்கு மாகாணத்தில், மன்னாரில் இந்த அணுகுமுறை விஷப் பரீட்சையாக மாறுவதற்கு இடமுண்டு. கட்சிகளின் செல்வாக்கை அளவிட முற்பட்டு இறுதியில் ஒட்டுமொத்தமாகவே கூட்டமைப்பின் பின்னடைவுக்கு இது வழிவகுத்துவிடலாம். இந்த விடயம் தொடர்பில் தமிழரசு கட்சியும் ஏனைய கட்சிகளும் ஆழமாக ஆராய வேண்டும். அதிகமதிகம் சேர்ந்து நிற்க வேண்டிய காலத்தில் தனித்துவத்துக்கான விஷப் பரீட்சைகளில் ஈடுபடுவது சிக்கலானது. அது மேலும் தமிழர்கள் சிதறுவதற்கும் தமிழர் அரசியலை பலவீனப்படுத்துவதற்கே பயன்படும். ஏற்கனவே, தமிழ் தேசிய அரசியல் செயல்பாடுகள் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றது.

உள்ளூராட்சி தேர்தலை தனித்து எதிர்கொள்வது என்பதற்கு அப்பால், ஒரு முறையாக வியூகத்தின் அடிப்படையில் அணுகுவது தொடர்பிலேயே கூட்டமைப்பின் கட்சிகள் ஆராய வேண்டும்.

# யாழ். பல்கலையில் தொழில் வாய்ப்பு சந்தை! 500 மாணவர்கள் தொழில் பெறுவதற்கு வாய்ப்பு!




*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழில் சந்தை நாளை புதன்கிழமை காலை 9:00 மணி முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.*

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மனிதவள முகாமைத்துத் துறையின் 'AHEAD' செயல்திட்டத்தின் கீழ், தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடாத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை - 2022 இற்கான சகல போதுமானதும், பொருத்தமானதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தெரிவித்துள்ளார்.*

*இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தத் தொழில்வாய்ப்பு சந்தையின் பிரதான நோக்கமாக அமைவது நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பை (Internship Opportunities) பெற்றுக் கொடுப்பதாகும். இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட்பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 20 தொழில் வழங்கும் நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், சுமார் 500.இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இந் நிகழ்வின் ஓர் அங்கமாக மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை மற்றும் சுயவிபரக்கோவை என்பவற்றை எவ்வாறு சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வெற்றியடைவது தொடர்பான செயலமர்வு ஒன்று இலங்கை ஆளணி பட்டய நிறுவனம் (CIPM) ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், சமீபத்தில் தமது பீடத்தில் பட்டப் படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழிற்றுறை நிறுவனங்களுடன் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தொடர்புகளை விருத்தி செய்தல் என்பன இத் தொழில் வாய்ப்புச் சந்தையின் துணை நோக்கங்களாகக் காணப்படுகின்றன - என்று கூறினார். (ஐ)*

# இரு பிள்ளைகளுக்கு ரூ.40 ஆயிரம் தேவை

## *ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு*

*கொழும்பு, டிசெ. 13*

*முதலாம் தவணைக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு இரு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்துக்கு சுமார் 40 ஆயிரம் ரூபாய் தேவைப்படுவதாகத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அரசாங்கம் எங்களது எச்சரிக்கைகளைக் கேட்கவில்லை. கேட்டிருந்தால் நாடு இந்நிலைமைக்கு வந்திருக்காது எனவும் குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*2020ஆம் ஆண்டு முதல் நாம் கூறியவற்றை இந்த அரசாங்கம் கேட்கவில்லை. அரசாங்கம் பயணிக்கும் பாதை சரியில்லை. இந்த முறையில் பயணித்தால் நாடு வீழும், பணவீக்கம் ஏற்படும், பொருள்களின் விலைகள் அதிகரிக்கும், வட்டி வீதங்கள் அதிகரிக்குமென எச்சரித்தோம்.*

*ஆனால், நாம் கூறிய எதனையும் கேட்கவில்லை. நாம் இவ்வாறு கூறும்போத சிரித்தார்கள். அரசாங்கம் திமிர்பிடித்திருந்ததால் சுயவிமர்சனத்தைக்கூட செய்யவில்லை. இறுதியில் நாம் எச்சரித்த அனைத்தும் நடந் தது.*




*நாட்டு மக்கள் ஒருவேளை உணவுக்குக் கூட சிரமபடும் நிலைக்கு வந்துள்ளனர். இரு பிள்ளைகளைக் கொண்ட குடும்பமொன் ஸ்ரீறுக்கு முதலாம் தவணைக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு 40 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது.*

*நாம் கூறியதை கேட்காத மொட்டுக் கட்சி அரசாங்கம், தமது கடந்தக் கால பயணம் தவறு புதியப் பாதையில் பயணிக்க வேண்டும். புதியப் பாதை சிரமமானதாக இருக்கும் என இப்போது கூறுகிறது. இவர்களால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது. லீகுவான் வந்தாலும் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.*

*மக்களால் விரட்டியடிக்கப்பட்டவர்கள் மீண்டும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிப்பெற மக்கள் ஒன்றிணைய வேண்டுமென கேட்கிறார்கள் - என்றார். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் உங்களது உயர்ந்த எண்ணம் ஒன்று நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்த நற்செய்தி வந்து சேரும். பயணத்தால் அலைச்சல் அதிகரிக்கும்.

**இடபம்**
உங்களுக்கு தைரியம் அதிகரிக்கும். நேற்று முயற்சித்த செயல் இன்று நிறைவேறும். பொது இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவருடைய விருப்பத்தை இன்று நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்**
உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். திறமை வெளிப்படும் நாள். நேற்று எதிர்பார்த்த ஒன்றை இன்று அடைவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**கடகம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட தடையை விலகும். எதிர்பார்த்த செயலில் அனுகூலம் உண்டாகும். திறமை வெளிப்படும். சிந்தித்து செயல் படுவீர்கள். நீங்கள் ஈடுபடும் தொழிலில் லாபம் அடைவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய முயற்சி இன்று வேண்டாம். வழக்கமான செயலில் கவனம் செலுத்துவது நல்லது. அலைச்சலும் செலவும் அதிகரிக்கும்

**கன்னி**
நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். புதிய வேலைக்கான முயற்சி வெற்றியாகும். உங்களிடம் அன்பு செலுத்துபவர்களுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**துலாம்**
இன்று நீங்கள் நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். மற்றவரை அனுசரித்துச் செல்வதால் நிம்மதி கிடைக்கும். வியாபாரம் குறித்த சிந்தனை மேலோங்கும்.

**விருட்சிகம்**
தர்ம சங்கடத்திற்கு ஆளாவீர்கள். முயற்சி பலிக்கும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். அதிகாரிகளை அனுசரித்துச் செல்வதின் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

**தனுசு**
விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்ப்பு இழுபறியாகும். பணியிடத்தில் சிறுசிறு சிக்கல்களை சந்திப்பீர்கள். செலவுகள் செய்தும் உங்கள் முயற்சி நிறைவேறாமல் இழுபறியில் இருக்கும்.

**மகரம்**
முயற்சிகளில் சாதகமான நிலை உண்டாகும். புதிய வாகனம் வாங்குவீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் லாபம் ஏற்படும். விமர்சனம் செய்தவர்களும் உங்களைப் பாராட்டுவர்.

**கும்பம்**
மகிழ்ச்சியான நாள். வாழ்க்கைத் துணையின் ஆதரவுடன் உங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த ஒரு செயல் முடிவிற்கு வரும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் ஒருவருக்கு ஏற்பட்ட மனகலக்கத்தை சரி செய்வீர்கள். நிம்மதியான நாள். இருப்பிடத்தில் சில மாற்றங்களை செய்வீர். புதிய வாகனம் வாங்குவதற்கான யோசனை ஏற்படும். பிள்ளைகளுக்காக நேரத்தை செலவிடுவீர்.

# புதுச்சேரியில் மாநிலத்தில் தி. மு. கவின் ஆட்சி அமையும்!

சென்னை, டிசெ. 13

“புதுச்சேரி மாநிலத்தில் தி. மு. க. ஆட்சி அமையும். திராவிட மொடல் ஆட்சி புதுச்சேரிக்கு வருவது தற்போதைய தேவை”, என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் பேசினார்.

புதுச்சேரியில் நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



”தமிழகம், புதுச்சேரி என நான் பிரித்து பார்ப்பதில்லை. தமிழகம், புதுச்சேரி உட்பட 40 மக்களவைத் தொகுதிகள் என்றுதான் சொல்வது வழக்கம். திராவிட இலக்கியத்தின் தலைநகர் புதுச்சேரிதான். கழகத்தில் இருப்போரிடம் போட்டி இருந்தால்தான் கட்சி வளரும். அதே நேரத்தில் பொறாமை கூடாது. தமிழகத்தில் மாற்றம் ஏற்பட்டு உதயசூரியன் மலர்ந்து திராவிட மொடல் என்று பெருமையோடு சொல்கிறோம். திராவிட மொடல் ஆட்சி புதுச்சேரிக்கு வருவது தேவைதான். உங்களுக்கு மட்டுமல்ல எனக்கும் அந்த ஆசை உள்ளது. கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் கூட அந்த வாய்ப்பு கிட்டியது. ஆனால், போய்விட்டது.

தற்போது புதுச்சேரியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிதான் நடக்கிறது. ஆனால், மக்களுக்காகதான் நடக்கிறதா? புதுச்சேரி முதல்வர் உயர்வானவர்தான். நல்லவர்தான். ஆனால், அடிப்பணிந்து கிடக்கிறார். வல்லவராகவும் இல்லை. ஆளுநர் ஆட்டிபடைக்கும் வகையில் புதுச்சேரியில் ஆட்சி நடப்பதற்கு வெட்கப்பட வேண்டாமா - அடங்கி ஒடுங்கி போய் ஆட்சி நடக்கிறது. இது புதுச்சேரிக்கு இழுக்கு.

ஏதாவது நன்மை நடந்துள்ளதா? இந்தச் சூழலில் புதுச்சேரியில் தி. மு. க. ஆட்சி வர விரும்புகிறார்கள். ஏற்கெனவே தி. மு. க. ஆட்சியும், தி. மு. க. கூட்டணி ஆட்சியும் நடந்துள்ளது. நிச்சயமாக தி. மு. க. ஆட்சி மீண்டும் புதுச்சேரியில் உதயமாகும் - என்றார். (ஐ)

# புதுச்சேரியில் தி. மு. க. ஆட்சி! ஸ்டாலின் கூறியதில் தவறல்ல!!

புதுச்சேரி, டிசெ. 13

“புதுச்சேரியில் தி. மு. க. ஆட்சி உதயமாகும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் கூறியதில் தவறில்லை” என்று முன்னாள் முதல்வர் நாராயணசாமி பதில் அளித்துள்ளார்.

புதுச்சேரியில் மதச்சார்பற்ற அணிக்கு காங்கிரஸ்தான் தலைமை வகிக்கும் என்று நாராயணசாமி தெரிவித்திருந்தார். புதுச்சேரியில் தி. மு. க. ஆட்சி உதயமாகும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுபற்றி புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமியிடம் கேட்டதற்கு, “புதுச்சேரியில் தி. மு. க. ஆட்சி உதயமாகும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் கூறியதில் தவறில்லை. அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய ஆட்சி வரவேண்டும் என்றுதான் விரும்புவார்கள். சமீபத்தில் குஜராத்தில் நடந்த தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி கூட ஆட்சியமைப்போம் என்று கூறினார்கள்” என்று குறிப்பிட்டார். (ஐ)

# தி. மு. க. குடும்பக் கட்சி என்பதை ஸ்டாலின் விரைவில் நிரூபிப்பார்!

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, டிசெ. 13

முதல்வர் மு. க. ஸ்டாலின், அவரின் மகன் உதயநிதிக்கு விரைவில் அமைச்சர் பதவி வழங்கி, தி. மு. க. குடும்ப கட்சி என்பதை உறுதி செய்வார் என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தெரிவித்தார்.

அ. தி. மு. க. கட்சிக்கு புதிய உறுப்பினர்களை சேர்க்கும் நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் எந்த முன்னணி நடிகர் நடித்த படமாக இருந்தாலும், அது உதயநிதிக்கு சொந்தமான நிறுவனத்தின் மூலம்தான் வெளியிட வேண்டும் அல்லது தரகுப்பணம் தர வேண்டும். இதனால், 150இற்கும் மேற்பட்ட படங்கள் வெளியிட முடியாத நிலையில் உள்ளன. அ. தி. மு. க. ஆட்சியில் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி திரைப் படங்கள் வெளியாகின.

உதயநிதிக்கு விரைவில் அமைச்சர் பதவி வழங்கி, தி. மு. க. குடும்ப கட்சி என்பதை முதல்வர் ஸ்டாலின் உறுதி செய்வார். அந்தக் கட்சிக்காக உழைத்தவர்கள் எத்தனையோ பேர் இன்றும் பதவியின்றி உள்ளனர். அ. தி. மு. கவை பொறுத்தவரை சாமானியன் கூட உயர்ந்த பதவிக்கு வர முடியும் - என்றார். (ஐ)

# பா. ஜ. கவுக்கு தமிழகத்தில் 25 எம். பிக்கள் கிடைப்பார்கள்!

கோவில்பட்டி, டிசெ. 13

வரும் மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் 25 எம். பிக்கள் பா. ஜ. கவுக்கு கிடைப்பார்கள். அதில், 5 பேர் அமைச்சரவை அமைச்சர்களாவது உறுதி - என்று கூறியுள்ளார் பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை.



மக்களவைத் தேர்தல் வருவதற்கு இன்னும் 17 மாதங்கள் உள்ளன. தி. மு. க. அரசுக்கு நிர்வாக கோளாறு. தமிழகத்தில் மது கடைகள் மூலம் ஆண்டுக்கு ரூ.38 ஆயிரம் கோடி அரசுக்கு வருவாய் வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் ரூ.4 ஆயிரம் கோடி அதிகமாகிறது. எதிர்க்கட்சியாக இருந்தபோது, மதுக் கடைகளை மூட வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கொடிபிடித்து போராட்டம் நடத்தினார்.

ஆனால், தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின் மௌனமாகிவிட்டார்.

தமிழுக்காக பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் 1981இல் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் 5 தமிழ் பல்கலைக் கழகங்கள் தொடங்குங்கள். அதற்கு நிதி மத்திய அரசு கொடுக்கும். அடுத்தமுறை கனிமொழி தூத்துக்குடியில் வெற்றி பெற முடியாது - என்றார்.

# ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு மாநாடு

## நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் பெருமான் திருவவதாரம் செய்து இருநூறாவது ஜனன ஆண்டிலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிறப்புமிகு ஏற்பாட்டிலும் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபை, யாழ்.மாநகரசபை சமய விவகாரக் குழு ஆகிய வற்றின் இணை ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதிக ளில் நாவலர் பெருமான் அவதரித்த - நாளைக் கந்தன் திருவீதியுலா வரும் புனித பதியிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு நடைபெற வுள்ளது.

நாவலர் பெருமானின் குரு பூஜை நன்னாளிலே ஆரம்ப மாகி ஜனன தின நாளிலே நிறைவு காணவுள்ள இம் மாநாடு நிகழ்வுகள் நல்லூர்ப் பதியிலே நாவலர் மணிமண் டபம், நாவலர் கலாசார மண்டபம், ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம் ஆகிய இடங் களிலே ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு என நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.

ஆன்மிக அரங்கு நிகழ்வுகள்

ஸ்ரீலஸ்ரீஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலே ஆன் மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் 14.12.2022 அன்று காலை 7.30 மணிக்கு குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகவுள்ளன. அத னைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற ஓவியங்களும் நாவலர் பெருமானால் நம் சமூகத்திற்குத் தரப்பட்ட படைப்புகளும் உள்ளடங்கிய கண்காட்சி நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவமும் இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு நாவலர் பெருமானின் திருவுருவப் படம் தாங்கிய திருவூர்வல நிகழ்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண் டபத்திலிருந்து நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் நோக்கிப் பவனி வரவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்திலே, பெயர்ப் பலகைத் திரை நீக்கத்தினைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் பெருமானுக் கான குருபூஜை நிகழ்வுக ளோடு ஆன்மிக அரங்கின் அரங்க நிகழ்வுகள், நல்லை ஆதீன முதல்வர் வணக்கதிற் குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமா சார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் வணக்கத் திற்குரிய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் திருமுன் னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பா ளர் ய.அநிருத்தனன் தலை மையில், யாழ்.மாநகர முதல் வர் வி.மணிவண்ணன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப் பிக்க நிகழ்வுகள் அரங்கேற வுள்ளன.

சமயப் பெரியார்கள், கல்விமான்கள், அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலரும் பங்கெடுக்க வுள்ள இந்நிகழ்வில் ''நாவலர் சைவக்காவலர்'' எனும் தலைப் பிலான செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகனின் சிறப்புரை, நூல் வெளியீடு மற்றும் அறநெறிப் பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆகியவை நாவ லர் கலாசார மண்டபத்திலே ஆன்மிக அரங்கில் நிகழ்ந் தேறவுள்ளன.

நல்லூர், ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில், ஐந்து நாட்கள் மாலை நேர நிகழ்வு களாகப் பொது அரங்கு நிகழ் வுகள் நடைபெறவுள்ளன. மாலை 5.00 மணி தொடக் கம் 7.00 மணி வரை நிகழ்வு கள் இடம்பெறவுள்ளன.

பொது அரங்கின் முத லாம் நாள் நிகழ்வு அமெ ரிக்கா, ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமி களின் சீடர் வணக்கத்திற் குரிய ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் சிலாபம், முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் பிரதம குரு வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ ச.பத்மநாப சர்மாவும் திருமுன்னிலை வகிக்க, வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப் பிக்க, கனடா - சைவசித் தாந்த பீட இயக்குநர் வைத் திய கலாநிதி இ.லம்போதர னின் சிறப்புரை, நூல் வெளி யீடு, யாழ்.பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைப் பீட, இசைத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் பரந்தாமன் நவரட்ணத்தின் பண்ணிசைக் கச்சேரி முதலான கலை நிகழ்வுகளும் அரங்கேறவுள் ளன. (அ)

# ஒரு கிலோ தோடம்பழம் ரூ.1900!

கொழும்பு, டிசெ. 13

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ தோடம்பழத்தின் விலை ரூ.1,990 ஆக உயர்ந் துள்ளது. இறக்குமதிச் செலவு மற்றும் வரி அதிகரிப்பு கார ணமாக தோடம்பழம் உள் ளிட்ட பழங்களின் விலையை அதிகரிக்கவேண்டி யுள்ள தாக பழ இறக்குமதியாளர் கள் தெரிவித்தனர்.

சில மாதங்களுக்கு முன், இறக்குமதி செய்யப்பட்ட மூன்று தோடம்பழங்கள் 100 முதல் 200 ரூபாய் வரையி லான விலையில் விற்பனை செய்யப்பட்டது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தோடம்பழங் கள்ஏற்றுமதி செய்யப்படுவ தால் இறக்குமதி செய்யப் பட்ட தோடம்பழங்களே இலங்கை சந்தையில் அதிகம் விற்பனையாகின்றன. (அ)

# ஆட்சியாளர்களின் புண்ணியத்தில் மூன்று வேளை சாப்பிடின்றி மக்கள்!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 13

ஊழல் ஆட்சியாளர்களின் செய்த புண்ணியத்தால், நாட்டு மக்கள் மூன்று வேளை சாப்பிட முடியாமல் இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இது மக்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கும் காலம். அப்படியான நேரத்தில் நீங்கள் எங்களுடன் கைகோர்த்துள் ளீர்கள். நீங்கள் மிகவும் கஷ்டமான வாழ்க்கையை அனுபவித்து வரும் காலம்.

நாங்கள் இந்த காலத்தில் மக்களின் முகத்தில் சிரிப்பை காணவில்லை. நாட்டின் தற்போதைய ஊழல் ஆட்சியா ளர்களின் புண்ணியத்தில் நாட்டில் வாழும் 80 வீதமான மக்களுக்கு மூன்று வேளை சாப்பிட முடியாமல் போயுள் ளது.

பிள்ளைகளுக்கு ஒரு வேளை சாப்பாட்டை சரியாக கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள் ளது.

மக்கள் தற்போது மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் காய்கறியுடன் சோறு சாப்பிடு கின்றனர். இறைச்சி, மீன் சாப்பிட முடியாத நிலைமை.

பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு புத்தகங்கள், சீருடைகளை வாங்கிக்கொடுக்க முடியாத சூழல், முதியவர்க ளுக்கு மருந்துகளை பெற முடிய வில்லை. அரசாங்கம் மருந்து களை கொடுப்பதில்லை. மருந்து களை கொள்வனவு செய்ய கையில் பணமில்லை-என்றார். (அ)



# இரவு களியாட்ட விடுதிகள், கசினோ, கஞ்சாவை இலங்கை கலாசாரத்துக்குள் சேர்க்க இடமில்லை

## பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 13

வெளிநாடுகளில் படித்தவர்கள் மற்றும் வாழும் பறங்கியர் கூறுகின்றனர் என்பதற்காக இரவு வாழ்க்கை, இரவு நேர களியாட்ட விடுதிகள், கெசினோ, கஞ்சா போன்றவற்றை இலங்கையின் கலாசாரத்துக்குள் சேர்க்க இடமளிக்க முடியாது என கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு குரண புனித பேருது கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே பேராயர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புனிதமான பௌத்த மதத்தால் போஷிக்கப்பட்ட நாட்டின் நாகரீகம் மற்றும் கலாசாரத்தை அழிக்க அவர்களுக்கு இடமளிக்க முடியாது. இப்படியான முட்டாள் வேலைகளுக்கு இடமளிக்கவேண்டாம் என பௌத்த தேரர்கள் உட்பட சமய தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

சர்வதேச நாணய நிதியம் அல்லது உலக வங்கி கூறுகின்றன என்பதற்காக நாட்டுக்கு பொருந்தாத சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பிச்சை எடுத்து சாப்பிடுவதை போன்றது.

சில அரசியல்வாதிகள் இலங்கையை விற்றேனும் சாப்பிட்டு, குடித்து வாழலாம் என நினைத்து, வெளிநாட்டு நிறுவனங்களிடம் நாட்டின் பங்குகளை வழங்கி வருகின்றனர்.

உயர் மட்டம் முதல் கீழ் மட்டம் வரை ஊழலுக்கு அமையாகியுள்ளனர்

அதிகாரம், பதவியை பாதுகாத்துக் கொள்ள நாட்டை பயன்படுத்தவேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் உயர் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை உள்ளவர்கள் ஊழலான முறைகளுக்கு அடிமையாகியுள்ளனர்.

ஒரு புறம் போதைப் பொருளை வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என கூறி, மறுபுறம் கஞ்சா பயிரிட இடமளிக்கின்றனர்.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் நாட்டுக்குள் சிந்தனை ரீதியான முழுமையான புரட்சி ஏற்பட வேண்டும்-என்றார். (அ)

# ரணிலின் உருவப் பொம்மையுடன் நீதிமன்ற வளாகத்தில் போராட்டம்



கொழும்பு, டிசெ. 13

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் வசந்த முதலிகேயை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டம் கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உருவப் பொம்மையொன்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும் இடத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

அத்துடன் அந்த பொம்மைக்கு பணம் வழங்கப்படுவது போன்ற பாவனையையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சார சபையின் மறுசீரமைப்பு ஆறு வாரங்களில் நிறைவுபெறும்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர



கொழும்பு, டிசெ. 13

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான பணிகள் ஆறு வாரங்களில் பூர்த்தி செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் தொடர்பிலான கடினமான காலம் நிறைவடைந்துள்ளதாகவும், சட்டத்திற்கு அமைய இரண்டு திருத்தங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மின்சார சட்டத்தில் கொண்டு வரப்பட்ட இரண்டு திருத்தங்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி வாக்களித்ததாகவும், எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள மின்சாரச் சட்டத் திருத்தங்கள் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்பதனால் அதற்கு ஆதரவாக வாக் களிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் வற்புறுத்த வேண்டும் என அமைச் சர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்ப தற்கான முன்மொழிவுகளை கொண்டு வர நியமிக்கப்பட்ட குழு, அந்த நிறுவனத்தை 14 சுயாதீன நிறுவ னங்களாக பிரிக்கவேண்டும் என பரிந்து ரைத்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பில், இலங்கை மின்சார சபையையோ அல்லது அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களையோ தனியார் மயமாக்குவது கிடையாது என குழுவின் உறுப்பினர் கலாநிதி சுசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை பிரிக்கப்படும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் அவற்றின் வளங்களும் அரசாங்கத்திடம் இருக்கும் எனவும் ஊழியர்களை பணிநீக்கம் செய்யமாட்டோம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# உயிரிழந்த கால்நடைகளின் மாதிரிகள் குறித்து ஆராய்ச்சி



கொழும்பு, டிசெ. 13

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த கால்நடைகளின் மாதிரிகள், மேலதிக பரிசோதனைகளுக்காக பேராதனை கால்நடை வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை புலனாய்வு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பின்னரே மாதிரிகள் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் கால்நடைகள் உயிரிழந்தமைக்கான காரணத்தை கண்டறியும் ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும் என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

கடந்த 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 802 மாடுகளும் 34 எருமை மாடுகளும் 256 ஆடுகளும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்டாஸ் தாக்கத்தால் முல்லைத்தீவில் 500க்கும் மேற்பட்ட இடங்களில் மின் தடை

முல்லைத்தீவு, டிசெ. 13

மண்டாஸ் புயலின் தாக்கத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டதாக மின்சார சபையினர் தெரிவித்தனர்.

மாவட்டத்தின் முதன்மை வீதிகள் மற்றும் கிராமப்புற வீதிகளில் மரங்கள் முறிந்து மின் இணைப்பின் மீது விழுந்ததால் அதிகளவான இடங்களில் வயர்கள் அறுந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது இருக்கின்ற வளங்களை வைத்து மக்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.(அ)

# வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு 7 வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியது கொழும்பு மாநகரசபை



கொழும்பு, டிசெ. 13

வலிதென்மேற்கு பிரதேச சபையின் பாவனைக்கென 7 கழிவகற்றும் வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது கொழும்பு மாநகரசபை.

தென்பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே நட்புறவை ஏற்படுத்தும் வகையில் வலிதென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் கடந்த வருட இறுதியில் கொழும்பு மாநகர சபைக்கான நட்புறவு பயணத்தை மேற்கொண்டனர்.

அதன் விளைவாக இவ்வருட ஆரம்பத்தில் கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க தலைமையில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது வழங்கிய வாக்குறுதியின்படி, கொழும்பு மாநகர சபையில் காணப்பட்ட, மீள் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய நிலையில் இருந்த ஏழு வாகனங்கள் கொழும்பு மாநகர சபையால் உரிய அனுமதிகள் பெறப்பட்டு திருத்தப்பட்டு, கொழும்பு மாநகர சபையின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் செய்த வலிதென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் தலைமையிலான உறுப்பினர் குழாமிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. (அ)

# மேலும் தாமதமடையும் அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, டிசெ. 13

புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நியமிக்கப்படுவது மேலும் தாமதமாகும் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ள 290 கோடி அமெரிக்க டொலர் கடனுதவி, நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்த பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாணய நிதியத்தின் இந்த ஒப்புதல் கிடைத்த பின்னர், புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது.

அமைச்சரவைக்கு நியமிக்க வேண்டிய புதிய அமைச்சர்கள் 12 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி இருந்தது.

எனினும் அமைச்சர்கள் நியமிக்கப்படுவது தொடர்ந்தும் தாமதமாகி வந்தது.

வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

அமைச்சரவையில் தற்போது 18 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய மேலும் 12 அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு பின்னர் 12 புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய தேசியக்கட்சியின் வஜிர அபேவர்தன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் ஜீவன் தொண்டமான், தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவரும் அமைச்சர்களாக பதவியேற்பார்கள் என தகவல்கள் வெளியாகி இருந்தன.

இவர்களை தவிர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மீதமுள்ள அமைச்சு பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். (அ)

# வடக்கின் பொருளாதாரத்துக்கான சர்வதேச வாயில் மீண்டும் திறப்பு!

## விமான சேவை ஆரம்பம் குறித்து டக்ளஸ் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 13

தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகளின் பலனாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலிக்கான விமான சேவையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட பலாலிக்கான விமான சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளமை, வடக்கு மாகாண மக்களுக்கு மாத்திரமன்றி கிழக்கு மற்றும் அநுராதபுரம் பொலனறுவை போன்ற வடமத்திய மாகாணங்களும் நன்மை பயக்கவுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடிப்படையான வசதிகளுடன் மட்டுப்படுத்தப்பட்டளவு சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிக்கின்றன.



விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டம் கட்டமாக விஸ்தரிப்பதற்கு தேவையான நகர்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இது தொடர்பாக, இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதுடன் அமைச்சரவையிலும் பிரஸ்தாபிக்கவுள்ளேன்.

இந்நிலையில், மக்கள் சரியான முறையில் இதனைப் பயன்படுத்துவார்களாயின், எதிர்காலத்தில் இந்தியாவிற்கான சேவைகள் விரிவுபடுத்தப்படும் என்பதுடன் ஏனைய நாடுகளில் இருந்தும் சேவையை முனனெடுப்பதற்கும் விமான நிறுவனங்கள் முன்வரும்.

இதன்மூலம், எமது பிரதேசத்தின் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைவதுடன், ஏற்றுமதி இறக்குமதி செயற்பாடுகளுக்கான நேரடி வாசலாகவும் பலாலி விமான நிலையம் செயற்படும். இது எமது மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும்" என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காங்கேசன் துறைக்கும் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் போன்றவற்றிற்கு இடையிலான சரக்கு படகு சேவையை ஆரம்பிக்கும் தன்னுடைய முயற்சிகளும் விரைவில் சாத்தியமாகும்-என்றார். (அ)

# காட்டுப்பன்றி இறைச்சியுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, டிசெ. 13

கிளிநொச்சி விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் காட்டுப் பன்றி இறைச்சியுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 03 துப்பாக்கிகள், 250 ரி-56 தோட்டாக்கள், ஒரு வாள், கத்திகள் மற்றும் 08 கிலோ காட்டுப்பன்றி. இறைச்சியும் கண்டெடுக்கப்பட்டது.

மேலும், சட்டவிரோத மதுபானங்களை வடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செப்புச் சுருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (அ)

# போதைப்பொருளுக்கு எதிராக தீவக இளைஞர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

போதை பொருளுக்கு எதிராக தீவக இளைஞர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது




நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை தீவக மறைக்கோட்டத்துக்கு உட்பட்ட பங்குகளைச் சேர்நத இளைஞர்கள் வேலணைப் பிரதேசத்தில் போதைவஸ்துக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஒரு பிரிவினர் மண்கும்பான் சந்தியிலிருந்தும், இன்னொரு பிரிவினர் வங்களாவடிச் சந்தியிலிருந்தும் போராட்டத்தை ஆரம்பித்து சாட்டி திருத்தலத்தை நோக்கிப் பாதாதைகளை ஏந்திப் போதைப்பொருளுக்கெதிராக குரல் கொடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார், தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி டேவிட் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொலிஸார், உத்தியோகத்தர்கள் நலன் விரும்பிகள், இளையோர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நடந்த திருட்டு ராஜபக்ஷவின் மனைவி செய்த மாபெரும் மோசடி!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அதிரடிக் கருத்து

கொழும்பு, டிசெ. 13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு தேவைக்கு ஏற்ப அதனை மீண்டும் உருவாக்குவது ராஜபக்ஷக்களின் கனவுகளில் ஒன்றாக காணப்பட்டது. அவர்கள் ஆட்சிக்கு வரும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடவில்லை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடைய மிக முக்கிய காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற திருட்டு ராஜபக்ஷவின் மனைவி செய்த மிகப்பெரிய மோசடியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்திற்கான மாற்றம் என்ற தொனிப்பொருளில் குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று எமது நாட்டில் சுமார் 33 வீதமானவர்களுக்கு தொழில் இல்லை. பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்துள்ளது. முதற் தடவையாக இலங்கை வங்குரோத்து அடைந்து விட்டதாக சர்வதேசத்துக்கு அறிவித்தது. பயணம் செய்வதற்கு எரிபொருள் இல்லை. உண்பதற்கு உணவில்லை. மின்சாரம் இல்லை. கல்விச் செயற்பாடுகள் பூச்சிய மட்டத்திற்கு சென்று விட்டன.

இந்த நாட்டில் அரசியலவாதிகளின் செயற்பாடுகள் முற்றிலும் பிழையானவை. ஆட்சியில் இருந்தவர்கள் திருடியமையே நாடு இன்று வங்குரோத்து அடைய காரணமாகும். இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டவற்றில் மோசடிகள் இடம்பெற்றன.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் வரை ஆட்சியில் உள்ளவர்கள் அனைவரும் மோசடியில் ஈடுபட்டனர். அன்று நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி செயல்திட்டத்தை நானே ஆரம்பித்தேன்.

ராஜபக்ஷ அதில் 15 பில்லியனை ரூபாய் வரையில் கையாடல் செய்தார். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற திருட்டு ராஜபக்ஷவின் மனைவி செய்த மிகப்பெரிய மோசடியாகும்.

இவ்வாறான திருட்டுக்கள் காரணமாக இன்று எந்த நாடும் வங்குரோத்து அடையாத அளவிற்கு இலங்கை வங்குரோத்து அடைந்துள்ளது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாதொழித்து பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு தேவைக்கு ஏற்ப அதனை மீண்டும் உருவாக்குவது ராஜபக்ஷக்களின் கனவுகளில் ஒன்றாக காணப்பட்டது.

அவர்கள் ஆட்சிக்கு வரும் வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் திருடவில்லை. நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. அதில் பெரும்பான்மை பலத்துடன் காணப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பராளுமன்றத்தில் 6 கட்சிகளாக பிரிந்து செயற்படுகிறது. அதில் பெரும்பாலனவர்களை ராஜபக்ஷ அழைத்துச் சென்று விட்டார்.

எதிர்காலத்தில் நாட்டை மீட்டெடுக்க இளைஞர்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் இதனை நன்கு உணர்த்தின.

கடந்த 74 வருடங்களாக நாட்டு மக்கள் ஆட்சியாளர்களை பதவியில் அமர்த்தினாலும் அவர்கள் மக்களை ஏமாற்றி ஊழல் மற்றும் மோசடி, கொலை, கொள்ளையில் ஈடுபட்டு நாட்டையே முற்றாக இல்லாது செய்துள்ளனர்.

இந்த நிலையில் நாட்டை கட்டியெழுப்ப கூடிய பொருத்தமான தலைவர் ஒருவர் இல்லாத நிலையே இன்று காணப்படுகிறது.

நாட்டை கட்டியெழுப்பும் புதிய தொரு அரசியல் கலாசாரம் மற்றும் மாற்றமொன்று தேவைப்படுகிறது. புதியதொரு தலைமைத்துவம் தேவைப்படுகிறது. புதிய திட்டங்கள், கொள்ளைகளை கொண்ட தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார். அரசியலமைப்பில் புதிய மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது-என்றார். (அ)

# இலங்கைக்கு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்று அவசியமா?

மிராக் ரஹீம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் அமர்வுக்கு சற்று முந்திய காலப் பிரிவின் போது உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான யோசனை ஒன்றை இலங்கை அரசாங்கம் முன்வைத்திருந்தது. அரசாங்கம் சரியாக ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கடப்பாட்டை மேற்கொண்டிருந்த நிலையில் ஒரு விதத்தில் இது ஒரு புதிய விடயமாக இருந்து வரவில்லை. உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30:1 இன் ஒரு பாகமாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இணங்கியிருக்கும் நிலைமாறு கால நீதி மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பான பல வழிமுறைகளில் ஒன்றாகும். இலங்கை 2015 செப்டெம்பர் மாதம் இந்தத் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது.

நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாதிருக்கும் மனக்குறைகளைக் கவனத்தில் எடுப்பதற்கென உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது பெருமளவுக்கு சவால் மிக்க ஒரு பணியாகும். மிக மோசமாக நேரடியாக பாதிக்கப்பட்டிருப்பவர்களின் திட்டவட்டமான தேவைகள் மற்றும் அபிலாசைகள் என்பவற்றை சரிவர அறிந்து, சமூகங்களுக்கு இடையில் ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் வாதிடப்படும் விதத்தில், இந்தப் பொறிமுறையின் வடிவமைப்பு மற்றும் அது செயல்படும் விதத்தை எடுத்துக் காட்டும் திட்டத்தின் தயாரிப்பு என்பவற்றை இயலச் செய்வதற்கென கலந்தாலோசனை அணுகுமுறை ஒன்றை பின்பற்றுவது இச்செயற்பாட்டின் ஒரு முதன்மையான கருவியாக இருந்து வரும்.

### நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனை செயலணி

இது தொடர்பாக நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனை செயலணியின் அறிக்கைகள் இதற்கான சிந்தனைக்கு ஒரு பயனுள்ள துவக்கப் புள்ளியை வழங்குகின்றன. பொது மக்களின் கருத்துக்களை - குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களை - கண்டறிந்து கொள்வதற்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அரசாங்கத்தினால் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. பரிந்துரைகளை சேகரிப்பதற்கென செயலணி பல முறைமைகளைப் பயன்படுத்தியது. 15 உள்ளூர் வலயக் கமிட்டிகள் உருவாக்கப்பட்டமை அதன் முக்கியமான கருவிகளில் ஒன்றாகும். இக்கமிட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுக் கூட்டங்களை நடத்தியதுடன், பாதிக்கப்பட்டவர்களின் திட்டவட்டமான பிரிவினருடன் இலக்குக்குழு கலந்துரையாடல்களையும் நடத்தியது. இது உயரளவிலான பிரதிநிதித்துவம் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய தரப்புக்களை உள்வாங்குதல் என்பவற்றில் கணிசமான ஒரு சாதனையை எடுத்துக் காட்டியது. வன்முறை மற்றும் நாட்டில் இடம்பெற்ற பாரிய அளவிலான மோதல்கள் என்பவற்றின் விளைவாகத் தோன்றி மிக மோசமான பாதிப்புக்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கான இலங்கை அரசின் முயற்சிகளை இது எடுத்துக் காட்டியது. எவ்வாறிருப்பினும், இச் செயலணியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கண்ணோட்டங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை போதியளவில் பரிசீலனை செய்வதற்கு ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் தவறியிருக்கும் விடயம், அண்மைய வருடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட நிலைமாறு கால நீதிப் பொறி முறைகள் மீதான பொது மக்களின் நம் பிக்கையை மேலும் சீர்குலைத்துள்ளது.

**உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறி முறை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30:1 இன் ஒரு பாகமாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இணங்கியி ருக்கும் நிலைமாறு கால நீதி மற்றும் மனித உரிமை கள் என்பன தொடர்பான பல வழிமுறைகளில் ஒன்றாகும்.**

இறுதி அறிக்கையில் உள்ளக்கப்பட்டிருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான அத்தியாயம், பொது மக்களால் எழுப்பப்பட்டிருந்த பன்முகப்பட்ட கண்ணோட்டங்களைத் தொகுத்து முன்வைத்திருந்தது. இவை இத்தகைய ஆணைக்குழுவொன்றின் ஆணையாளர்கள் மற்றும் ஆளணியினர் ஆகியோருக்குத் தேவைப்படும் திறன் தொகுதி மற்றும் அனுபவங்கள் என்பன தொடக்கம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் மற்றும் மோதல்கள் என்பன வரையில் பரந்த வீச்சில் இருந்து வந்தன. ஒரு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எவ்வாறு செயற்பட வேண்டும், அத்தகைய ஒரு ஆணைக்குழு செய்றபட முடியுமா என்ற கண்ணோட்டத்தில் ஊடாக சிந்திப்பவர்களுக்கு முக்கியமான கண்ணோட்டங்களை இது வழங்கியது. இந்தக் கட்டுரையில் மிக முக்கியமான ஒரு கேள்வி தொடர்பாக நான் கவனம் செலுத்துகிறேன்: "உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதன் நோக்கம் என்ன?" உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலம் அடுத்து வரும் மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தால், அத்தகைய ஒரு பொறிமுறை ஏன் தேவைப்படும் மற்றும் அது எவ்வாறு செயற்பட முடியும் என்பது குறித்து விவாதிப்பதும், சிந்திப்பதும் முக்கியமாகும். உண்மை மற்றும் நல்லிணிக்க செயலணியின் அறிக்கைகளிலிருந்து விடயங்களைப் பெற்றுக் கொள்ளும் அதே வேளையில், CTF செயன்முறையின் ஒரு பாகமாக இருந்து வந்த பொது மக்களுடனான சந்திப்புக்கள் குறித்த எனது சொந்த அவதானிப்புக்களையும் நான் முன்வைக்கின்றேன். இந்தச் செயன்முறையில் நானும் சம்பந்தப்பட்டிருந்ததுடன், மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டிருந்தவர்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தேன்.

### உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மாதிரியின் பொருத்தப்பாடு

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முறை பற்றி 1990களில் உலகளாவிய ஒரு தோற்றப்பாடு உருவாகியது. பாரியளவிலான மோதல்கள் மற்றும் அல்லது இராணுவ ஆட்சிகள் என்பவற்றிலிருந்து மீண்டு வரும் நிலைமாறு கால சமூகங்களில் இந்நிலைமை காணப்பட்டது. இலத்தீன் அமெரிக்காவே உயரளவிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வகை கட்டமைப்புக்களை கொண்டிருந்த பிராந்தியமாக இருந்து வந்தது. எனினும், தென்னாபிரிக்காவே இந்த வகையைச் சேர்ந்த பொறிமுறைக்கான மிகச் சிறந்த குறியீடாக உள்ளது. எவ்வாறிருப்பினும், தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு செயற்பட்ட விதம் மற்றும் அது உதாசீனம் செய்திருந்த விடயங்கள் என்பன தொடர்பாக கணிசமான அளவில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், பாரியளவிலான அத்துமீறல்கள் நீதித் துறையையும் மேவிச் சென்றிருக்கும் பின்புலங்களில் நிலைமாறு கால நீதிக் கருவிப் பொதியின் முதன்மையான ஒரு கூறாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மாதிரி நோக்கப்படுகிறது. ஆழமாக வேரூன்றியிருக்கும் மனக்குறைகள் பிளவுண்ட ஓர் அரசியல் முறைமை உதாசீனம் செய்யப்படுகின்றன சமூகத்தில் நிலவி வரும் பாரிய பிளவுகள் நிச்சயமற்ற நிலை மற்றும் எதிர்கால வன்முறை என்பன மீண்டும் இடம்பெறும் அச்சுறுத்தலை எடுத்து வருகின்றன. பல்வேறு வகைகளைச் சேர்ந்த மோதல்களையும், வேறுபட்ட விளைவுகளை எதிர்கொண்டிருக்கும் சமூகங்களையும் கவனத்தில் எடுப்பதற்கென பன்முகப் பின்புலங்களில் TRC மாதிரி பின்பற்றப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் அடிப்படை நோக்கம் அதன் அமர்வுகளுக்கு ஊடாக உண்மையை கண்டறிவதாகும். இந்த அமர்வுகளில் பாதிக்கப்பட்டவர்கள், சமூகத் தலைவர்கள் மட்டுமன்றி குற்றம்சாட்டப்பட்டிருக்கும் குற்றச் செயல்களை நிகழ்த்தியவர்களும் கூட சான்றுகளை முன்வைக்கிறார்கள் அது 'உண்மைகளை' மக்கள் பகிரங்கமாக செவிமடுத்து, அங்கீகரிப்பதற்கும் (அத்துமீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களை குறிப்பிட்டு, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல்களுடன்) பிரசுரிக்கப்பட வேண்டிய ஓர் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கும் வாய்ப்பளிக்கின்றது. இந்த இறுதி அறிக்கை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளை கொண்டிருக்கும். ஒவ்வொரு பின்புலத்திலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களின் பணிப்பாணைகள் மற்றும் அணுகுமுறைகள் என்பன வேறுபட முடியும். ஆனால், இந்த ஆணைக்குழுக்களின் ஒட்டுமொத்த செயற்பாட்டு அனுமானம், திட்டவட்டமான குற்றச் செயல்கள் மற்றும் அத்துமீறல்கள் என்பன தொடர்பான விசாரணைகளும், உண்மையை கூறுவதும் வரலாற்று ரீதியான தெளிவுபடுத்தல், புரிந்துணர்வு, குணப்படுத்தல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்த முடியும் என்பதாகும்.

இந்த மாதிரி பரந்த வீச்சிலான காரணங்களின் அடிப்படையில் விமர்சிக்கப்பட்டு வந்துள்ளது. நீதியுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டுமென அது கேட்டுக் கொள்வதனையும் இது உள்ளடக்குகின்றது. உண்மையைக் கூறுவதற்கு பதிலாக பாரதூரமான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியிருப்பவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் போது குறிப்பாக இத்தகைய விமர்சனங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதாவது, விசாரணை நடத்தி, அத்தகைய குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க வேண்டும் என்ற விதத்தில் அரசுகள் கொண்டிருக்கும் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு இது முரணானதாக இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது. தனிப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் திட்டவட்டமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற பணிப்பாணையைக் கொண்டிருந்தால் அவை திட்டவட்டமான மோதல்கள், பிரச்சினைகள் மற்றும் சமூகங்கள் என் பவற்றை புறமொதுக்கும் நிலை இது தொடர்பாக கருத்து வேறுபாடு தோன்றும் மற்றொரு துறையாகும். அந்த விதத்தில், பல்வேறு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களின் அணுகு முறைகளை பரிசீலனை செய்தவற்கென ஓரளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பின்புலத்திற்கு பொருத்த மான விதத்தில் முன்னெடுப்பதற்கும், அனுசரித்துச் செல்வதற்கும் மட்டுமன்றி இலங்கையில் அத்தகைய ஒரு மாதிரி வினைத்திறன் மிக்கதாக இருக்குமா என் பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கும் அது தேவைப்படுகின்றது.

கலந்தாலோசணை செயலணியில் முன்வைக்கப்பட்ட ஒரு சில பரிந்துரைகள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மாதிரியின் பொருத்தப்பாடு குறித்து பேசியிருந்தன: தென்னாபிரிக்க மாதிரி இலங்கையின் பின்புலத்திற்கு எவ்வாறு பொருத்தமானதாக இருக்க முடியும் என ஒரு சமர்ப்பணம் கேள்வி எழுப்பியிருந்தது. அதேவேளையில், உலகெங்கிலும் செயற்பட்டு வந்திருக்கும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்கள் மற்றும் அதனையொத்த தேசிய பொறிமுறைகள் என்பன குறித்த ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஏனைய சமர்ப்பணங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. சர்வதேச உதாரணங்கள் குறித்த ஒப்பீட்டு ரீதியான ஒரு சட்ட ஆய்வை மேற்கொள்வது மட்டும் இங்கு ஒரு சவாலாக இருந்து வரவில்லை மாறாக, இலங்கை பின்புலத்தின் திட்டவட்டமான நிலவரங்களுடன் அவற்றை மதிப்பீடு செய்வதும் ஒரு சவாலாக இருக்கின்றது.

### ஆணைக்குழுக்களின் சுமை மிக்க வரலாற்றுப் பாரம்பரியம்

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கென ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்களினால் உருவாக்கப்பட்ட பெருந்தொகையான ஆணைக்குழுக்களின் வரலாறு பல சமர்ப்பணங்களில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்து, அவற்றின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஒரு சில சமர்ப்பணங்கள் சுட்டிக்காட்டியிருந்த அதே வேளையில், ஏனைய சமர்ப்பணங்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக கடுமையான ஆட்சேபணையை தெரிவித்திருந்தன. இந்தப் புதிய பொறிமுறை ஏனைய அரச ஆணைக்குழுக்களின் நீண்ட பட்டியலிலிருந்து வேறுபட்டதாக இருக்குமா என அவர்கள் கேள்விகளை எழுப்பியிருந்தார்கள். வட புலத்தைச் சேர்ந்த மூத்த பிரஜை ஒருவர் 1977இல் சன்சோனி ஆணைக்குழுவின் முன்னால் தான் சமர்ப்பணங்களை முன்வைத்திருந்ததாக குறிப்பிட்டு, ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் மற்றும் அமுல் செய்யப்படாத பரிந்துரைகள் என்பவற்றின் பின்னணியில், மற்றொரு ஆணைக்குழு ஏனைய ஆணைக்குழுக்களிலும் பார்க்க எதனை வித்தியாசமான விதத்தில் செய்யப் போகின்றது எனக் கேள்வி எழுப்பினார்.

கலந்தாலோசனை செயலணியின் பொதுக்கூட்டங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் இடம்பெற்ற பொழுது நானும் அக்கூட்டங்களில் பங்கேற்றேன். அவற்றில் சமூகமளித்திருந்தவர்கள் வெளிப்படுத்திய பெருமளவுக்கு பொதுவான ஓர் உணர்வு, அரசின் பன்முக முகவரகங்களுடன் செயற்படுதல் தொடர்பான ஒட்டுமொத்த அலுப்பு நிலை சம்பந்தப்பட்டதாகும். பொலிஸ் போன்ற நிரந்தர விசாரணை அமைப்புக்கள் தொடக்கம் அவ்வப்பொழுது தேவைக்கென அமைக்கப்படும் ஆணைக்குழுக்கள் வரை இவை அமைந்திருக்கின்றன. தமது இழப்பு குறித்தும் பதில்கள், நீதி மற்றும் ஏனைய வடிவங்களிலான நிவாரணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் குறித்தும் பேசிய எண்ணற்ற குடும்ப உறுப்பினர்களின் கடும் துயரம், விரக்தி மற்றும் வேதனை என்பன எம்மை பாதிக்காமல் இருக்க முடியாது. 1989 -1990 காலப் பிரிவில் எம்பிலிபிட்டியவில் காணாமற் போன மாணவர்களின் குடும்பங்களைப் போன்ற பாதிக்கப்பட்ட ஒரு சிலர் எமக்குக் கிடைக்கும் உள்நாட்டு நிவாரண வழிமுறைகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். (09 ஆம் பக்கம் பார்க்க...)

# ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்களினால் உருவாக்கப்பட்ட பெருந்தொகையான ஆணைக்குழுக்கள்!

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் ஒரு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், சம்பவத்தை நிகழ்த்திய முதன்மையான நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் இடம்பெற்றிருந்தன. ஆனால், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை இந்தக் குடும்பங்களினால் இன்னமும் கண்டறிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடைய உடல் எச்சங்கள் எங்கிருக்கின்றன என்பதனை அடையாளம் கண்டுகொள்வதும் இதில் அடங்குகின்றது. எனவே, அரசு ஏற்கனவே பெருந்தொகையான தகவல்களையும், ஆவணங்களையும் வைத்திருக்கும் அத்தகைய ஒரு சம்பவம் தொடர்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ன செய்ய முடியும்.

வடக்கிலிருந்து முன்வைக்கப்பட்ட ஒரு சமர்ப்பணம் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்கள் “எத்தகைய பிரயோசனமும் இல்லாமல் தமது கதைகளை மீண்டும் மீண்டும் கூற வேண்டியிருப்பதால் தாம் அனுபவித்த கடும் மன அதிர்ச்சியை அவர்கள் மீண்டும் அனுபவிக்க வேண்டியுள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளது. மீண்டும் கடும் மன அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்படுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணர்வு ரீதியான துன்பத்தையும், வேதனையையும் ஏற்படுத்துதல் என்பவற்றுடன் கூடிய ஆபத்துக்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மத்தியில் அரசுக்கு எதிரான விரக்தி மற்றும் ஆத்திரம் என்பன தீவிரமடையக் கூடிய அச்சுறுத்தலும் காணப்படுகின்றது. தாம் அனுபவித்திருக்கும் அத்துமீறல்களுக்கு பொறுக் கூற வேண்டும் என்ற நிலை அவர்கள் மீது சுமத்தப்படுவதே இதற்கான காரணமாகும்.

விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் அவ்வவ்போதைய தேவைகளுக்கென அமைக்கப்படும் பொறிமுறைகள் என்பவற்றுடன் சம்பந்தப்படும் அனுபவங்கள், உண்மையை தேடும் பொறிமுறை தொடர்பான ஏமாற்றங்களையும், சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளன. பல்வேறு அரச முகவரகங்களிடம் தாம் பல தடவைகள் சாட்சியளித்திருப்பதாகவும் உண்மையை கண்டறிந்து கொள்வதற்கு எத்தகைய தொடர் நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஒரு சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகள் குற்றச் செயல்களை இழைத்த நபர்களின் அடையாளத்தை பதிவு செய்வதற்கு மறுத்திருப்பதாக அல்லது ஒரு முறைப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்திருப்பதாக அல்லது பாதிக்கப்பட்டவர்கள் துன்புறுத்தல் அல்லது பாலியல் இலஞ்சம் என்பவற்றுக்கு கூட ஆளாக்கப்பட்டிருப்பதாக ஒரு சிலர் தெரிவித்திருக்கிறார்கள்.

பல சமர்ப்பணங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல் குறித்த அச்சமில்லாமல் சுதந்திரமான விதத்தில் பேசக்கூடிய சாதகமான ஒரு சூழலின் முக்கியத்துவம் குறித்து கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. சில சமர்ப்பணங்கள் துன்புறுத்தல் சம்பவங்களை சுட்டிக்காட்டியிருந்தன. அதாவது, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகளை செய்திருந்தவர்கள், தமக்கு எதிராக குற்றச் செயல்களை இழைத்த நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதற்குப் பதிலாக, தம்மைப் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் நிலையை உணர்ந்திருந்தார்கள். இது உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தற்போதைய சூழ்நிலையில் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஒரு சவாலாக இருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகியோர்



துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டிருக்கும் நிலையில், அவர்களுடைய பாதுகாப்பு உண்மையில் கரிசனைக்குரியவையாக இருந்து வரும். அறகலயவுடன் சம்பந்தப்பட்டவர்கள் தவிர, குறிப்பாக வடக்கு கிழக்கைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகிய தரப்புக்கள் இத்தகைய சம்பவங்களை எதிர்கொண்டு வருகின்றன.

கலந்தாலோசனை செயலணி அறிக்கை குறிப்பிட்டிருப்பதைப் போல “இந்த முடிவுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றும் தொடர் வழிமுறைகள் மேற்கொள்ளப்படாமை என்பவற்றின் பின்னணியில், விசாரணை ஆணைக்குழுக்களின் பெயர், தண்டனை விலக்குரிமை என்பதற்கு இணையானதாக இருந்து வருகின்றது.” போரின் முடிவை அடுத்து சரணடைந்தவர்களின் குடும்பங்களைப் போலவே, தமது அவல நிலை குறித்து கிஞ்சித்தும் பொருட்படுத்தாத ஓர் அரசை பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அது மட்டுமன்றி, அந்த மக்கள் நேரடியாக எதிர்கொண்டு அனுபவித்த “உண்மைகளை” மறுப்பதற்கும், உதாசீனம் செய்வதற்கும், அழித்து விடுவதற்கும் கூட அரசு முயன்று வருகின்றது. இந்த நிலையில், இந்தக் கலந்தாலோசனைகள் கூட சந்தேகத்துடனும், அரசின் மெத்தனத்தின் ஒரு பாகமாகவும் நோக்கப்பட்டு வந்தன. இந்த முறைமைசார்ந்த தோல்வியின் வரலாற்று மரபினையே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரசு இந்த மக்களின் வேதனை மற்றும் மன்றாட்டங்கள் என்பவற்றை செவிமடுத்துக் கேட்கும் முதல் தடவை இது என்பதைப் போல பாவனை செய்து, பாதிக்கப்பட்டவர்களை அழைத்து, தமது கருத்துக்களை கூறுமாறு கேட்டுக்கொள்ளும் சுதந்திரம் தனக்கிருக்கிறது என அந்த ஆணைக்குழு கருத முடியாது.

## எதிர்ப்பு மற்றும் மீள் நோக்கம்

உண்மையை கண்டறியும் பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த பெருந்தொகையான சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதற்கான நியாயப்படுத்தல் பல்வேறு வழிகளில் முன்வைக்கப்பட்டிருந்தன: மேலே எடுத்துக் காட்டப்பட்டதைப் போல, அத்தகைய ஒரு ஆணைக்குழு மெத்தனம் மற்றும் தண்டனை விலக்குரிமை என்பவற்றுக்கான ஒரு கருவியாக இருக்க முடியும் என்ற அச்சம் ஒரு சிலருக்கு மத்தியில் நிலவி வருகின்றது அவ்வாறான ஒரு ஆணைக்குழு தேசிய பாதுகாப்பை உதாசீனம் செய்து, வளர்ச்சியை சீர்குலைத்து, தற்பொழுது நிலவி வரும் இன உறவுகளை மேலும் மோசமாக்குவதுடன், பொது மக்களின் பணத்தை விரயம் செய்யும் ஒரு செயற்பாடாகவும்

**வன்னி போன்ற இடங்களில் நடத்தப்பட்ட பொது மக்களின் சந்திப்புக்களின் போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான பாரம்பரிய மாதிரி நிராகரிக்கப்பட்டதுடன், பொது மக்கள் விசாரணை மன்றம் ஒன்றுக்கான வேண்டுகோள் முன்வைப்பட்டிருந்தது.**

இருந்து வர முடியும் என ஏனைய சமர்ப்பணங்கள் எடுத்து விளக்கியுள்ளன. வட மேல் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் என்பவற்றிலிருந்து முன்வைக்கப்பட்ட ஒரு சில சமர்ப்பணங்கள் இந்தப் பொறிமுறை நீதியை முன்னெடுக்கும் முயற்சிகளுடன் பிணைக்கப்பட்டிருக்கும் என்ற விதத்தில் அச்சத்தை தெரிவித்துள்ளன. நீதிக்கான போராட்டம் தொடர்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எடுத்து வரக்கூடிய தாக்கங்கள் குறித்து அத்துமீறல்கள் தொடர்பாக நீதியை கோரி நிற்பவர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான சான்றுகள் எவ்வாறு கையாளப்படப் போகின்றன மற்றும் அவை நீதிப் பொறிமுறைக்குள் அனுப்பி வைக்கப்படுமா என்ற விதத்தில் ஒரு சில சமர்ப்பணங்கள் கேள்விகளை எழுப்பியுள்ளன.

கலந்தாலோசனைகள் இடம்பெற்ற காலப் பிரிவின் மத்தியிலும் கூட பாதிக்கப்பட்டவர்கள் தாம் அனுபவித்த துன்பங்கள் தொடர்பாக பெருமளவுக்கு சான்றுகளை முன்வைப்பார்கள் என்ற விதத்தில் திட்டவட்டமான பரிந்துரைகளை முன்வைக்கமாட்டார்கள் என்ற விதத்திலும் ஓர் எதிர்பார்ப்பு மனித உரிமைகள் குழுக்களுக்கு நிலவியது. அதற்குப் பதிலாக, பாதிக்கப்பட்டவர்கள் தாம் அனுபவிக்க நேரிட்ட முதன்மையான அத்துமீறல்களை எடுத்து விளக்குவதுடன் நின்று விடாது, நிவாரணம் கோரும் செயன்முறையின் போது அரசுடனான தமது அனுபவங்கள் குறித்த அடிப்படையில் யோசனைகளையும் முன்வைத்திருந்தார்கள்.

உதாரணமாக, ஒரு சில பாதிக்கப்பட்ட பெண்கள், பெண் அரச உத்தியோகத்தர்களுக்கான ஒரு கோட்டா இருந்து வர வேண்டும் என்ற விடயத்தையும், தாம் எதிர்கொண்ட பல்வேறு வடிவங்களிலான பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பதற்கென திட்டவட்டமான பாலியல் துன்புறுத்தல் கொள்கை ஒன்று இருக்கவேண்டும் என்ற விடயத்தையும் வலியுறுத்தியிருந்தார்கள்.

ஒரு சிலர் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை 30:1 இக்கு அப்பால் நிலைமாறு கால நீதி வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென எதிர்கால கற்பனை தோற்றப்பாடுகளை குறிப்பிட்டிருந்தார்கள். கலந்தாலோசனை செயலணி ‘நான்கு பொறிமுறைகளுக்கு அப்பால் நிலைமாறு நீதி’ என்ற தலைப்பில் ஓர் அத்தியாயத்தை முன்வைக்க வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

வன்னி போன்ற இடங்களில் நடத்தப்பட்ட பொது மக்களின் சந்திப்புக்களின் போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான பாரம்பரிய மாதிரி நிராகரிக்கப்பட்டதுடன், பொது மக்கள் விசாரணை மன்றம் ஒன்றுக்கான வேண்டுகோள் முன்வைப்பட்டிருந்தது. அத்தகைய சமர்ப்பணங்களில் பகிரங்கமாக சாட்சியமளித்தல் போன்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒரு சில அம்சங்களை கொண்டிருக்கும் பொறிமுறை குறித்து பாதிக்கப்பட்டவர்கள் உரையாடியிருக்கின்றார்கள். வழக்கு விசாரணை மற்றும் தண்டனை வழிமுறைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய நீதிக்கூறுகள் தொடர்பாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விதத்தில் முன்வைக்கப்படும் வேண்டுகோள்

கலந்தாலோசனை செயலணியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்ததற்கு மாறான விதத்தில், குறிப்பாக பெருமளவுக்கு நேரடியாக பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தவர்கள் உண்மை கண்டறியப்பட வேண்டும் என்ற விதத்தில் உயர் அளவிலான கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். முக்கியமாக காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரின் குடும்பங்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கலந்தாலோசணைகளின் போது கணிசமான எண்ணிக்கையில் அவற்றில் பங்குபற்றியதுடன், தமது அன்புக்குரியர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதனை தாம் தெரிந்து கொள்ள விரும்புவதாக கூறியுள்ளார்கள்.

ஒரு சிலரை பொறுத்தவரையில் உண்மையை அறிந்து கொள்ளும் உரிமை தமது முதன்மையானதும், அவசரமானதுமான கோரிக்கையாக இருந்தது. இந்தக் கேள்விக்கான பதில் தமக்குக் கிடைக்கும் வரையில் நட்டஈடு மற்றும் ஏனைய வடிவங்களிலான இழப்பீடுகள் என்ற எந்தக் கருத்தையும் தெரிவிப்பதற்கு அவர்கள் முன்வரவில்லை. அவ்விதம் வழங்கப்படும் இழப்பீடுகளை அவர்கள் ஏற்றுக் கொண் டால் உண்மை மற்றும் நீதி என்பவற்றை கண்டறிவதில் மக்கள் ஆர்வமற்றவர்களாக இருந்து வருகின்றார்கள் என அரசு அதற்கு வியாக்கியானம் வழங்க முடியும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பல்வேறு நோக்களை நிறைவேற்றி வைக்க முடியும் என்ற விடயம் தொடர்பாக கவனத்தை ஈர்க்கும் விதத்தில் ஒரு சில சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன: உண்மையை நிலைநிறுத்துதல், மோதலுக்கான மூல காரணங்களை நிர்ணயித்தல், அத்துமீறல்களை நிகழ்த்தியிருப்பவர்களை அவற்றுக்குப் பொறுப்புக்கூற வைத்தல், வரலாறு குறித்த பன்முக கதையாடல்களை கட்டியெழுப்புதல், மீண்டும் அவ்விதம் நிகழாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல், ஏனையவற்றுடன் அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பாக நிவாரணங்களை கோருவதற்கான இயலுமையை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல்.

**(மிகுதி நாளை....)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ..........................................................................

ii) old / How / you? /are : ........................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..........................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ......................................................................

ii) அங்கே பாருங்கள் : ...................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்න | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

### கல்வி tv CHANNEL-1 — 13.12.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2 — 13.12.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சமூகத்துக்குத் தலைகுனிவை ஏற்படுத்துகின்ற போதை வியாபாரிகளை காட்டிக் கொடுப்போம்

## இளைஞர் வழிகாட்டல் மாநாட்டில் பி.எச்.அப்துல் ஹமீட்

நிந்தவூர், டிசெ. 13



நீங்கள் விழிப்புடன் இருங்கள். நமக்கு எதற்கு வன்பு என்று கடந்து போகாதீர்கள். எங்களுடைய தலைமுறையை காப்பாற்றுவோம். அது மட்டுமின்றி, சமூகத்துக்கு தலைகுனிவை ஏற்படுத்துகின்ற முஸ்லிம் போதை வஸ்து வியாபாரிகளை காட்டிக் கொடுப்போம். அவர்களை அழித்தொழிப்போம் என உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் தெரிவித்தார்.

இளைய தலைமுறையினருக்காக நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் வழிகாட்டல் மாநாட்டில்

பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டு இளைய தலைமுறையினரிடம் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூரின் பங்களிப்புடன் அஸ்ஸெய்யத் றஸ்மி மௌலானாவின்ஒருங்கமைப்பில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீமின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் அக்ரம் நூராமித் விசேட உரை நிகழ்த்தினார்.

இதன்போது உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் அக்ரம் நூராமித் நினைவுச்சின்னம் வழங்கியும் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டார்.

அதிபரும் அறிவிப்பாளருமான மர்/ஹூம் ஏ.ஆர்.எம் ஜிப்ரி நடத்திய "அறிவுக்களஞ்சியம்" நிகழ்ச்சி தொகுப்பின் நூல் வெளியீடும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

அப்துல் ஹமீட் மேலும் பேசுகையில்-

போதைப்பொருள் என்ற விடயம் சமூகத்துக்கு பயனற்ற குழுவாக மாறிக்கொண்டிருக் கிறது. வடக்கிலும் கிழக்கிலும் தான் அதன் தீவிரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் வந்தால் அதற்கு ஒரு விழிப்புணர்வு ஏற்படும் என்று ரஸ்மி மௌலானா என்னிடம் வேண்டிக் கொண்டார். அந்த அழைப்பை ஏற்று ஒரு நாடோடியாக அலைந்து திரிந்த நான், நீண்ட காலத்துக்குப் பிறகு இந்த கிழக்கு மாகாணத்திற்கு வந்திருக்கிறேன்.

இளைய தலைமுறையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு, வழி காட்ட வேண்டியவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய மாநாடாகத்தான் எனக்குத் தெரிகிறது.

காரணம் பொறுப்புக் கூற வேண்டிய நாங்கள் அந்த பொறுப்பைத் தட்டிக் கழித்து கடந்து போகின்றோம். இங்கே இருக்கின்ற எல்லோரும் அதற்குப் பொறுப்பு கூற வேண்டியவர்கள்.

பொறுப்பு கூற வேண்டியவர்கள் அனைவரும் அதனைப் பொறுப்பேற்று இருந்தால் இன்று இந்த துர்ப்பாக்கியமான நிலை வந்திருக்காது.

போதைவஸ்துப் பாவிப்பவர்கள் விற்பவர்களை நாங்கள் நமக்கெதுக்கு வம்பு என்று கடந்து செல்லாமல் நம்மால் முடிந்த அளவு அவர்களைக் காட்டிக் கொடுக்கவேண்டும். ஏற்கனவே போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற வழிகாட்டல்கள் இணையதளங்களில் வலம் வருகின்றன. அதனால் என்ன பயன்? போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை கண்டுபிடித்து என்ன செய்வது? அவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அழைத்துச் செல்லலாம் அவ்வளவுதான்: அவர்களை எங்களால் திருத்த முடியாது.

போதைப்பொருள் குறிப்பாக ஐஸ் என்னும் போதை பொருளை பயன்படுத்தும்போது அவர்களுக்கு அசாதாரணமான ஒரு பலம் வருகிறது என்பதுதான் உண்மை.

இதிலிருந்து எமது இளைய தலைமுறையை எப்படி காப்பது? இதற்குப் பொறுப்பு கூற வேண்டியவர்கள் யார் யார்? முதலில் பெற்றோர்கள்.

நான் பெற்றோரை நோக்கித்தான் எனது சுட்டு விரலை நீட்டுவேன்.

இந்த போதைப்பொருளுக்கு அடிமையாவதற்கு வறுமையும் ஒரு காரணம். வாழ்க்கைச் சூழலும் ஒரு காரணம் என்று இங்கே எல்லோரும் சொல்கிறார்கள்.

நான் வறுமை கோட்டுக்கு கீழே உள்ள வாழ்க்கை சூழலில் பிறந்து வளர்ந்தவன். எனக்கு இதுவரை போதைப் பொருளுக்கு அடிமையாகாமைக்குக் காரணம் என் அன்னை.

அன்னை எனக்கு இதுபற்றி எந்த அறிவுரையும் சொல்லவில்லை. ஆனால், அன்னை என் மீது கொண்டிருந்த அன்புதான் இந்த போதைப் பொருளுக்கு அடிமையாகாமைக்குக் காரணம்.-என்றார்.

(அ)

## கிழக்குக்கு முக்கியத்துவம்



நிந்தவூர், டிசெ. 13

இலங்கையின் முக்கிய முஸ்லிம் அரசியல் கட்சிகளுள் ஒன்றான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில், கட்சியின் முக்கிய பதவிகளுக்கு கிழக்கிலங்கையைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்த்தர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பலர் இவ்வாறு கட்சியின் முக்கிய பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பேராளர் மாநாடு கட்சித்தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தலைமையில், கொழும்பு, களுபோவிலவிலுள்ள ரோஸ் வூட்சிலோன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் இந்தியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவரும், முன்னாள் இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர், காதர் முகைதீன், தமிழ் நாடுபாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மனித நேய மக்கள் கட்சி மற்றும் தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகத்தின் தலைவருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மேலும் மாநாட்டில் கட்சியின் தேசியத்தலைவராக முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவு செய்யப்பட்டதுடன், கட்சியின் செயலாளர் நாய கமாக சட்ட முதுமாணி வை. எல்.எஸ். ஹமீதும், கட்சியின் தவிசாளராக எம்.எஸ்.எஸ்.அமீர் அலியும், கட்சியின் தேசிய அமைப்பாளராக அப்துல்லா மஹ்ரூபும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை கட்சியின் செயலாளர் நாயகமாக சட்ட முதுமாணி வை.எல்.எஸ்.ஹமீதுடன், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கே.எம்.ஏ. றஸாக் (ஜவாத்) தேசிய கொள்கை பரப்பு செயலாளராகவும், ஏ. அன்சில் பிரதி தேசிய செயலாளர், நாயகமாகவும் எம்.ஏ. எம். அஷ்ரப் தாஹிர் பிரதி தேசிய அமைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-06)

## அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு புதிய உறுப்பினராக றியாஸ் நியமனம்

மட்டக்களப்பு, டிசெ. 13

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய உறுப்பினராக மீராலெவ்வை முஹம்மது றியாஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்த ஏ.எல்.எம்.ஹம்ஸா கட்சியிலிந்தும், உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அதே கட்சியைச் சேர்ந்த மீரா லெவ்வை முஹம்மது றியாஸ் கட்சியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை (08) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை காரியாலயத்தில் அக்கட்சியின் பிரதிச் செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் மற்றும் சட்டத்தரணி அஷ்ஷேக் ஏ.எல்.எம். காசிம் ஆகியோர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



இவரது நியமனம் தொடர்பாக கடந்த 18.12.2022 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## மனித உரிமை தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு

அம்பாறை, டிசெ. 13



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்து இருந்தது. இந்நிகழ்வானது சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த சனிக்கிழமை இஸ்லாமிய கற்கைகள் நெறி பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. ஸி அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ஏ. எம் முஸ்தபா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டமியற்றல் பிரிவின் இணைப்பாளர் எம். எஸ். எப் நிஸ்பா நிகழ்த்தினார்.

தலைமை உரையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. ஸி அப்துல் அஸீஸ் நிகழ்த்தினார்.

இவர் தனது உரையில் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும், அவ்வுரிமைகள் மீறப்படும்போது அதனைப் பெற்றுக் கொள்வதற்காக மாணவர்கள் செயற்படுத்த வேண் டிய மூலோபாயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டமியற்றல் பிரிவின் தகுதிகாண் விரிவுரையாளர் எம். எம் சியானா சிறப்பு உரையை ஆற்றினார். இவர் இஸ்லாத்தின் பார்வையில் மனித உரிமைகள் எனும் தொனிப்பொருளில் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பொறியியலாளர் எம். எம் பதுலுல் ஹக் அவர்கள் எதிர்கால சந்ததியினர்க்கான உரிமைகள் தொடர்பாகவும் அதற்காக நாம் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் ஒரு விசேட உரையினை ஆற்றிச் சென்றார்.

இந்நிகழ்வில் குறித்த பீடத்தின் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# ரஷ்ய வாக்னர் கூலிப்படையின் தலைமையகம் தாக்கி அழிப்பு!

*மொஸ்கோ, டிசெ. 13*

ரஷ்யாவின் வாக்னர் கூலிப்படையின் தலைமையகத்தை உக்ரைன் படைகள் தாக்கியதாக கிழக்கு உக்ரைனில் உள்ள லுஹான்ஸ்க் ஆளுநர் செர்ஹி ஹைடாய் தெரிவித்துள்ளார்.

லுஹான்ஸ்க், கதிவ்காவில் வாக்னர் குழு சந்தித்த ஹோட்டல் பெரும் பாதிப்பை அடைந்துள்ளதாக, ஆளுநர் கூறினார். ஆனால், ஹோட்டலில் வாக்னர் குழு இருந்ததை உறுதிப்படுத்தவில்லை.

கதிவ்கா தாக்குதலின்போது, ரஷ்யா குறிப்பிடத்தக்க இழப்புகளை சந்தித்ததாகவும், மருத்துவ சிகிச்சையின் பற்றாக்குறையால் உயிர் பிழைத்திருக்கும் படைகளில் குறைந்த பட்சம் 50 சதவீதம் இறக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கத்திய நிபுணர்களின் கூற்றுப்படி, வாக்னர் குழு, ரஷ்யாவின் நலன்களுக்காக செயற்படும் கூலிப்படையாகும்.

வாக்னர் பிரிவுகள் முன்பு கிரிமியா, சிரியா, லிபியா, மாலி மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசில் போரில் ஈடுபட்டன.

தெற்கு உக்ரைனில் ஒரு வார இறுதியில் அமைதியின்மையின் மத்தியில், கிழக்கில் உள்ள ஹோட்டல் தாக்கப்பட்டது.

# இத்தாலி பிரதமரின் தோழி உட்பட மூன்று பெண்கள் சுட்டுக்கொலை!

## நான்கு பேர் படுகாயம் ரோம் நகரில் பரபரப்பு



*ரோம், டிசெ. 13*

இத்தாலியின் புதிய பிரதமரின் நண்பர் உட்பட 3 பெண்கள் ரோம் நகரில் உள்ள ஹோட்டலொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் உயிரிழந்தனர் மற்றும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

உள்ளூர் தொகுதியின் குடியிருப்போர் குழுவின் ஒரு பகுதியாக குழுவின் துணைத் தலைவரான லூசியானா சியோர்பா உள்ளிட்ட குழுவினர், பிடன் மாவட்டத்தில் உள்ள ஹோட்டலில் சந்தித்துக்கொண்டபோதே இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக, இத்தாலியின் லா ரிபப்ளிகா செய்தித்தாள் தெரிவிக்கிறது.

காயமடைந்தவர்களில் இரண்டு பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் என நம்பப்படுகிறது, ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டை வன்முறையின் கடுமையான அத்தியாயம் என ரோம் நகர மேயர் ராபர்டோ குவால்டியேரி விபரித்தார். மேலும், நேற்று திங்கட்கிழமை அவசர கூட்டத்தில் கலந்துகொள்வதாக கூறினார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக, 57 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாலிய பத்திரிகைகளால் பெயரிடப்பட்ட சந்தேக நபரின் உந்துதல் குறித்து பொலிஸார் இன்னும் கருத்து தெரிவிக்கவில்லை. இந்தத் தாக்குதல் அரசியல் சார்ந்ததாகக் கருதப்படவில்லை.

சந்தேக நபருக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் குடியிருப்பாளர் குழுவுக்கும் சில காலமாக கடுமையான தகராறு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி கொல்லப்பட்ட பெண்களில் ஒருவரை தனது தோழி நிகோலெட்டா கோலிசானோ என்று பெயரிட்டார். இறந்த மற்ற பெண்களின் பெயர் எலிசபெட்டா சிலென்சி மற்றும் சபீனா ஸ்பெராண்டியோ ஆகும்.

இத்தாலியின் தீவிர வலதுசாரி பிரதர்ஸ் ஒப் இத்தாலி கட்சியின் தலைவரான ஜியோர்ஜியா மெலோனி, கடந்த ஒக்ரோபரில் நாட்டின் முதல் பெண் பிரதமரானார். (அ)

# பலம்மிக்க நாடுகளின் தலைவர்களுடன் உக்ரைன் ஜனாதிபதி கலந்துரையாடல்!

*கீவ், டிசெ. 13*

உக்ரைன் ஜனாதிபதி விளேடிமிர் ஸெலென்ஸ்கி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், துருக்கி மற்றும் பிரான்ஸ் தலைவர்களுடன் நேற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

உக்ரைனின் நெருக்கடி நிலைமையை தீர்க்கும் சர்வதேச நிகழ்வுகளின் தொடரிலிருந்து அடுத்த வாரம் முக்கியமான தீர்வுகளை தாம் எதிர்பார்ப்பதாக உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



கடந்த பெப்ரவரி மாத பிற்பகுதியில் ரஷ்ய படையெடுப்பிற்குப் பின்னர், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் துருக்கிய ஜனாதிபதி தையிப் எர்டோகன் ஆகியோருடன் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

அத்துடன், உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய பாதுகாப்பு மற்றும் நிதி உதவிக்காக அமெரிக்க ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததாகவும், நாட்டு மக்களைப் பாதுகாக்க பயனுள்ள விமான எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்புகளை பெற்றுக்கொள்வது குறித்து அமெரிக்க ஜனாதிபதியிடம் பேசியதாகவும் உக்ரைன் ஜனாதிபதி சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, துருக்கிய ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் நேற்று முன்தினம் நடத்திய தொலைபேசிக் கலந்துரையாடலின்போது மோதலை விரைவில் முடிவுக்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இருந்த போதும், மேற்கத்திய நாடுகளின் மீதான நம்பிக்கையை மொஸ்கோ முழுவதுமாக இழந்துவிட்டதால், உக்ரைன் தொடர்பான இறுதித் தீர்வை எட்டுவது மிகவும் கடினமாகி விடும் என்று புட்டின் கடந்த வாரம் தெரிவித்திருந்ததுடன், நீடித்த போர் குறித்தும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# உலகம் முழுவதும் இந்த ஆண்டில் 67 ஊடகவியலாளர்கள் கொலை!

*நியூயோர்க், டிசெ. 13*

உலகம் முழுவதும் இந்த ஆண்டில் பணியின் போது 67 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச செய்தியாளர்கள் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2022 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் செய்தி சேகரிக்கும் பணியின்போது 67 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டு வன்முறைச் சம்பவங்களால் 47 ஊடகவியலாளர்கள் பலியான நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

உக்ரைன் போர், ஹெய்ட்டி அரசியல் பதற்றம், மெக்ஸிகோ கும்பல் வன்முறை போன்ற காரணங்களால் ஊடகவியலாளர்களின் உயிரிழப்பு இந்த ஆண்டு இவ்வளவு அதிகமாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டோரில் 99 சதவீதம் பேர் சீனாவில் 7 நாள்களில் குணம்!

*பீஜிங், டிசெ. 13*

சீனாவில் ஒமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டோரில் 99 சதவீதம் பேர் ஏழே நாளில் குணமானதாக அந்நாட்டு தொற்று நோய் தடுப்பு நிபுணர் ஜாங் நன்ஷன் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசிகளால் வரும் காலங்களில் நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதுடன், இணை நோய் தொற்றுடன் பாதிக்கப்படும் முதியவர்களின் எண்ணிக்கை குறையும் என்றும் தெரிவித்தார்.

ஒமிக்ரொன் பாதிப்பில் இருந்து மீண்டு வருவோர் நீண்ட நாள்களுக்கு கொரோனா தொற்று பாதிப்புக்கு உள்ளாக மாட்டார்கள் எனவும் ஜாங் நம்பிக்கை தெரிவித்தார். (அ)




# எத்தியோப்பிய அகதிகளின் 27 சடலங்கள் சாம்பியாவில்!

*லுசாகா, டிசெ. 13*

சாம்பியாவின் வீதியோரம் உயிரிழந்த 27 பேரின் சடலங்கள் வீசியெறியப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

எத்தியோப்பியாவிலிருந்து சென்ற அகதிகளே உயிரிழந்தவர்கள் என்றும், அவர்கள் பசி மற்றும் சோர்வு காரணமாக இறந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் தலைநகரின் புறநகரில் உள்ள ஒரு விவசாயப் பகுதியில் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பல சடலங்கள் வீசப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் அங்கு சென்றபோது, ஒருவர் உயிருடன் காணப்பட்டார். அவர் சிகிச்சைக்காக லுசாகா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

27 பேர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர். இறந்தவர்கள் அடையாளம் காண மற்றும் மரணத்திற்கான சரியான காரணத்தை தீர்மானிக்க பிரேத பரிசோதனைக்காக சவக்கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முதற்கட்ட பொலிஸ் விசாரணையில் பலியானவர்கள் அனைவரும் 20 முதல் 38 வயதுக்குட்பட்ட ஆண்கள் என்றும், அடையாளம் தெரியாத நபர்களால் சாலையோரம் வீசப்பட்டவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

"காவல்துறை மற்றும் பிற பாதுகாப்பு பிரிவுகள் இந்த விடயத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன," என்று பொஸ் செய்தித் தொடர்பாளர் டேனி மவாலே தெரிவித்தார்.

எத்தியோப்பிய புலம் பெயர்ந்தோர் தென்னா பிரிக்கா போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்யும்போது பெரும்பாலும் சாம்பியாவைப் பயன்படுத்துகின்றனர். இருப்பினும் புலம் பெயரும்போது இறப்புகள் அரிதாகவே உள்ளன. (அ)

வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு;

# 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கு நகை அடகு வைத்த மக்கள்!

கொழும்பு, டிசெ. 13

நிலவும் பொருளாதார கஷ்டங்கள் காரணமாக மாற்று வழிகள் எதுவும் இல்லாத நிலையில், இலங்கை மக்கள் ஒரு வருடத்திற்குள் சுமார் 20 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை அடகு வைத்து பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

நாட்டின் முன்னணி வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் மக்கள் தமது தங்க ஆபரணங்களை இவ்வாறு அடகு வைத்துள்ளனர் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார அறிவியல் மற்றும் தொகை மதிப்பு திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

மத்திய வகுப்பை சேர்ந்த மக்களே அதிகளவில் தமது தங்க ஆபரணங்களை அடகு வைத்து பணத்தை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 13 அனுமதிப் பெற்ற வணிக வங்கிகள், 10 நகை அடகு பிடிக்கும் நிறுவனங்களிடம் 193 பில்லியன் ரூபா அதாவது 19 ஆயிரத்து 300 கோடி ரூபாவுக்கு மக்கள் தமது தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளனர்.

தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக மக்கள் இவ்வாறு பணத்தை பெற்றுக்கொண்டுள்ளனர். மக்கள் அனுமதி பெற்ற நிறுவனங்களிடம் மாத்திரமல்லாது பணத்தை அதிகமாக வழங்கும் நிறுவனங்களிடமும் தமது தங்க ஆபரணங்களை அடகு வைத்து வருவதாக பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதியைத் தனியாக சந்தித்து பேசினார் பஸில்!

## முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு

கொழும்பு, டிசெ. 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை, அரசியல் அமைப்பு மற்றும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது



பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு வந்ததன் பின்னர் ஜனாதிபதியை சந்திப்பது இதுவே முதல் தடவை என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருவருக்குமிடையில் மாத்திரம் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இலங்கையிலிருந்து முதன்முறை பனங் கள் பிரான்ஸ்க்கு ஏற்றுமதி!

கொழும்பு, டிசெ. 13

இலங்கையிலிருந்து 25,000 பனங் கள் அடங்கிய போத்தல்கள் கொள்கலன் ஒன்று பிரான்ஸுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் இருந்து பனங் கள் போத்தல்கள் ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதல் முறை என்றும் இந்த ஏற்றுமதி மூலம் சுமார் 45,000 டொலர்களைச் சம்பாதித்துள்ளதாகவும் சபை குறிப்பிட்டுள்ளது.

பனங் கள் போத்தல்கள் வடக்கு பிராந்தியத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பனங் கள் போத்தல்கள் தற்போது அமெரிக்கா, கனடா மற்றும் சுவிற்சர்லாந்து உள்ளிட்ட பத்து நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கனடாவுக்கு அதிகளவு பனங் கள் விற்பனை செய்யப்படுவதாகவும் எதிர்காலத்தில் தென்னிலங்கையில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்வது குறித்து ஆலோசித்து வருவதாகவும் பனை அபிவிருத்திச் சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதிக்கு பெரமுன கடுமையான நிபந்தனை!

கொழும்பு, டிசெ. 13

எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வருபவர்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவேண்டுமென அந்தக் கட்சியின் சிரேஷ்டர்கள் குழுவினால் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தமது கட்சிக்கு 16 அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டிருந்ததாகவும் அதனை முதலில் நிறைவேற்றவேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவ்வாறு செய்யாமல் புதிதாக வருபவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கினால், அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில் இருந்து விலகிக் கொள்வதாகவும் அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், வரவு-செலவுத் திட்டம் நிறைவடைந்துள்ளதால், உடனடியாக அமைச்சரவையை புதிதாக நியமிக்குமாறும், எதிர்க்கட்சியில் இருந்து வந்தவர்களுக்கு முதலமைச்சர் பதவிகளை வழங்கக்கூடாது எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளை பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது. (அ)

# வைத்தியசாலை பெண் ஊழியர் போதைப்பொருளுடன் சிக்கினார்

கொழும்பு, டிசெ. 13

கேகாலை போதனா வைத்தியசாலையின் கனிஷ்ட பெண் ஊழியர் ஒருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பு நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த ஊழியர் 2,000 ரூபா பெறுமதியான 40 போதைப் பொருட்களை விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த பெண்ணிடம் விசாரணை நடத்தியபோது, இவர் நீண்ட காலமாக இவ்வாறு போதைப்பொருள் விற்பனை செய்து வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 4 இலட்சம் கிலோ கிராம் பால்மா துறைமுகத்திலிருந்து விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 13

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் அனுமதி கிடைக்காதமை காரணமாக துறைமுகத்தில் சிக்கியிருந்த 4 இலட்சம் கிலோ கிராம் பால்மாவை 118 மில்லியன் ரூபா வங்கி உத்தரவாதத்தில் விடுவிக்கப்பட்டதாக பியோடேல் பால் மா நிறுவனத்தின் தலைவர் டாக்டர் லக்ஷ்மன் விஜேசூரிய தெரிவித்தார்.

துறைமுகத்தில் காணப்பட்ட பால் மா கையிருப்பை விடுவிக்காவிட்டால் அது பழுதடையும் அபாயம் காணப்படுவதாகவும் அவ்வாறு இடம்பெற்றால் 600 மில்லியன் ரூபா நட்டத்தை சந்திக்க நேரிடும் எனவும் அவர் கூறினார். (அ)

# சாதகமான பட்ஜெட் என்பதால் மக்களுக்கு நிவாரணம் கிட்டும்

## அனுராதபுரத்தில் கூறினார் மஹிந்த

கொழும்பு, டிசெ. 13

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சாதகமான வரவு செலவுத் திட்டம் என்பதால் எதிர்காலத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன் தினம் பிற்பகல் அனுராதபுரம் விகாரைக்கு சென்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் பிற்பகல் அனுராதபுரம் வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதமஸ்தானாதிப பூஜ்ய பல்லேகம ஹேமரத்தன தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீ மகா போதியை வணங்கி ஆசி பெற்றார். (அ)



உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225



நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலின் புவனேஸ்வரி திருமண மண்டபத்தின் திறப்பு விழா நேற்று முன் தினம் காலை வெகு விமரிசையாக இடம் பெற்றது. (படம்: ஐ.சிவசாந்தன்)

# நிர்மாண கைத்தொழில் முறைகேடு; ஒரு வருடத்தில் 1,000 முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ. 13

நிர்மாண கைத்தொழிலில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பில் கடந்த ஒரு வருடத்திற்குள் சுமார் 1,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் நிர்மாணத்துறை தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாக சபையின் பணிப்பாளர் நாயகம், பொறியியலாளர் சஞ்ஜீவ ஜயசுந்தர குறிப்பிட்டார்.

கொடுப்பனவு செலுத்தப்படாமை தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் தொடர்பான முறைப்பாடுகளை எழுத்துமூலம் தமது அதிகார சபைக்கு சமர்ப்பிக்க முடியும் என நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# நாட்டில் மின் பாவனை 12 வீதத்தினால் வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 13

இந்த வருடம் நாட்டின் மின் பாவனை 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஹற்றன் பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் வறட்சி ஏற்படும் என இலங்கை மின்சார சபை கூறுவதில் எவ்வித அடிப்படையும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த காலங்களில் மின்சார விநியோகத் தடை மற்றும் கட்டண அதிகரிப்பு என்பன காரணமாக மின் பாவனை குறைந்துள்ளதாக அவர் கூறினார். (அ)

# முடியுமானால் அம்பாந்தோட்டையில் என்னை தோற்கடித்துக் காட்டுங்கள்!

## அறகலய செயற்பாட்டாளர்களுக்கு நாமல் சவால்

கொழும்பு, டிசெ. 13

ராஜபக்ஷவை பழிவாங்கும் நோக்கில் நாட்டை அழிக்காமல் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்டு தன்னை தோற்கடிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரகலய செயற்பாட்டாளர்களுக்கு சவால் விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் யு ரியூப் சனல் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் ,

எந்தவொரு கட்சியும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் ஆசியுடன் ஆட்சியைப் பிடிக்க முடியும்.

கடந்த 30 வருடங்களில் புலிகள் நாட்டுக்கு செய்ததை அரகலய செயற்பாட்டாளர்கள்



இப்போது செய்து வருகின்றனர்.

கொவிட்-19 பொருளாதார பாதிப்பில் இருந்து நாடு மீள முயட்சித்து வருகிறது. இவ்வாறான தருணத்தில் அரகலய செயற்பாட்டாளர்கள் நாட்டை மேலும் சீரழித்து அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றனர். ஆனால் அப்படி ஒரு விடயத்தை அனுமதிக்கமாட்டோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகிய பின்னரும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதியாக இருப்பதற்கான நியாயமான மக்கள் சக்தி இல்லை என அரகலய செயற்பாட்டாளர்கள் கோஷம் எழுப்புகின்றனர். அரசியலமைப்பைப் பற்றி எந்த அறிவும் இல்லாமல் அவர்கள் அவ்வாறு கூறுவதை இது காட்டுகிறது.

ராஜபக்ஷக்கள் இந்த நாட்டையும் மக்களையும் நேசிக்கிறார், எந்த சக்தியாலும் இதை மாற்ற முடியாது.ராஜபக்ஷவை பழிவாங்க நினைப்பவர்கள் நாட்டை அழிக்காமல் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்டு முடிந்தால் என்னை தோற்கடிக்கட்டும்- என்றார். (அ)



# தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

## வவுனியாவில் மக்கள் அவதி

வவுனியா, டிசெ. 13

தபால் ஊழியர்கள் பல் வேறு கோரிக்கைகளை முன் வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் மாலை 4.00 மணி தொடக்கம் நேற்று நள்ளிரவு வரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதற்கான ஆதரவை வழங்கும் வகையில் வவுனியா பிரதான தபால் நிலையம் நேற்று முடப்பட்டது. இதன் காரணமாக கடிதங்கள் , பொதிகள் அனுப்ப வந்த மக்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவு பெறுவதற்கு வருகை தந்த முதியவர்கள் எனப் பலரும் ஏமாற்றங்களுடன் திரும்பிச் சென்றிருந்தனர். (அ)

# சர்வதேச றோட்டரி கழகத்தின் தலைவர் இலங்கைக்கு விஜயம்

கொழும்பு, டிசெ. 13

சர்வதேச றோட்டரி கழகத்தின் தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ளார்.

இந்தியாவின் சென்னையில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் யூ.எல் 128 என்ற விமானத்தில் அவர் நேற்று மதியம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

உலகின் 210 நாடுகளில் அங்கத்துவம் பெற்றுள்ள சர்வதேச றோட்டரிக் கழத்தின் தலைவரின் வருகையை முன்னிட்டு நினைவு முத்திரையும் வெளியிடப்படவுள்ளது.



தமது இலங்கைக்கான விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

அவரது இலங்கை விஜயத்துடன் இணைந்து, ஒரு மில்லியன் டொலர் பெறும தியான மருந்துப் பொருட்கள் நாட்டுக்கு வழங்கப்படவுள்ளதுடன், 500 இலங்கை மாணவர்களுக்கு பிலிப்பைன்ஸில் உள்ள பல்கலைக் கழகத்தில் தகவல் தொழிநுட்பம் கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (அ)

# தபால் பணியாளரின் விடுமுறைகள் இரத்து

கொழும்பு, டிசெ. 13

சேவையை தடையின்றி பேணுவதற்காக தபால் திணைக் களத்தின் அனைத்து பணியாளர்களின் விடு முறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. தபால் திணைக் களத்தினால் இது குறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சில கோரிக்கைகளை முன்வைத்து தபால் சேவையாளர்கள் நேற்று முன் தினம் மாலை 4 மணிமுதல் முதல் அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த பணிப்புறக்கணிப்பானது நேற்று நள்ளிரவு 12 மணி வரையில் முன்னெடுக்கப்படும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை இணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார். (அ)

# சுங்க பரிசோதகர்கள் இருவர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, டிசெ. 13

கொக்கைன் போதைப்பொருள், போதைப் பொருள் முத்திரைகள் மற்றும் குஷ் போதைப் பொருட்களை வைத்திருந்த இரண்டு சுங்க பரிசோதகர்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்க மற்றும் தனியார் களஞ்சியசாலை ஒன்றில் பணிபுரிந்த சுங்க பரிசோதகர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சில சுங்க அதிகாரிகள் துறைமுகத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவர் துறைமுகத்தை விட்டு வெளியேறும் வேளையில் சைத்திய வீதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மற்றைய சந்தேக நபர் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# காற்றின் தரச் சுட்டெண் சில இடங்களில் உயர்வு

கொழும்பு, டிசெ. 13

காற்று மாசுபாட்டை அளவிடும் காற்றின் தர சுட்டெண் நேற்றுக் காலை 10 மணி நிலவரப்படி, கம்பஹாவில் 161 ஆகவும் கண்டியில் 159 ஆகவும் பதிவாகியுள்ளது.

சுவாசம் மற்றும் இதய நோய்கள் உள்ள குழந்தைகள் மற்றும் முதியோர்கள் வெளியே செல்லும் போது முக்கவசம் அணிய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இலகுவாக நோய் தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ளவர்கள் முடிந்தவரை வீட்டுக்குள்ளேயே பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்..

ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராஜேஸ் நட்ராஜ் ஆகியோர் வரவேற்றனர். இவர்களுடன், வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்

யாழ்ப்பாணம் - சென்னை இடையே சேவையில் ஈடுபடும் அலையன்ஸ் எயார்லைன்ஸ் நிறுவனம் வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன், சனி ஆகிய நான்கு நாட்கள் விமான சேவை நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

சென்னையிலிருந்து 10.50 மணிக்கு யாழ்ப்பாணத்தில் தரையிறங்கும் விமானம் மீண்டும் மதியம் 1.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கு புறப்படும். ஒருவர் 20 கிலோ வரையான பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 1660..

மாகாணத்தில் 691 மாடுகள் மற்றும் எருமைகளும் 296 ஆடுகளும் உயிரிழந்தன. அத்துடன், 182 மாடுகள் மற்றும் 147 ஆடுகள் என 329 கால்நடைகள் நோய்வாய்ப்பட்டுள்ளன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 511 மாடுகளும், 44 எருமைகளும், 108 ஆடுகளும் உயிரிழந்தன. 15 மாடுகளும் ஒரு எருமையும் நோய்வாய்ப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இரு நாட்களில் பெருந்தொகையான கால்நடைகள் உயிரிழந்தமை தொடர்பில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர விடுத்த விசேட பணிப்பின் பேரில் இந்த புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்நிலையில், சீரற்ற காலநிலைகளுக்கு மத்தியில் கால்நடைகளை பராமரிப்பது தொடர்பான பயிற்சிகளை கால்நடை வளர்ப்பாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (ஐ)

## இந்திய..

கொழும்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் இன்று காலை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதியுடன் இன்று மாலை நடக்கும் சந்திப்பில் இந்திய மத்தியஸ்தத்தை முன்மொழிவதா அல்லது இந்தியாவுடன் பேசி, அவர்களின் நிலைப்பாட்டை அறிந்த பின்னர் வெளியிடுவதா என்பது குறித்து ஒருமித்த முடிவு எட்டப்படும் என்றும் அறிய வருகிறது.

இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் நடக்கும் சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளான இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, புளொட் கட்சிகளின் தலைவர்கள் - பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ். கட்சிகளின் தலைவர்கள் - பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு கூடுகின்றனர்.

இவர்கள், ஜனாதிபதியுடனான சந்திப்பில் தமிழ்க் கட்சிகள் ஒருமித்து வலியுறுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் இறுதி செய்வார்கள் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், இந்த சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா பங்கேற்க மாட்டார் என்றும் அவருக்கு ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்க அழைப்பு இல்லாததால், சம்பந்தனின் இல்லத்தில் நடக்கும் கூட்டத்திலும் பங்கேற்க மாட்டார் என்றும் அறிய வருகிறது. எனினும், இதனை அவரின் தரப்பில் உறுதிப்படுத்த முடியவில்லை. (ஐ)

## 3வயது..

இந்த சம்பவத்தில் 38 வயதான நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

போதையில் இருந்த குறித்த நபர் வீட்டில் மனைவி இல்லாத சமயம் பிள்ளையை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்றும், வீடு திரும்பிய தாயார் சிறுமியின் உடலில் இருந்த இரத்தக்கறையை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார் எனவும் கூறப்படுகின்றது.

இதனிடையே, போதைப் பொருட்களை வாங்குவதற்காக தன்னையும் விபசாரத்தில் ஈடுபடுமாறு அவர் வற்புறுத்தி வந்தார் என்றும் கைதான நபரின் மனைவி பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கைதான நபர் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் உத்தரவிட்டுள்ளார். (ஐ-02)

## இந்தியா தலைமை..

அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வவனியாவில் ரெலோ அமைப்பின் அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“5 தமிழ் கட்சிகள் சம்பந்தன் தலைமையில் கூடி சில தீர்மானங்களை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தோம். அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் எங்கள் கோரிக்கையை முன்வைத்தோம்.

நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, ஏற்கெனவே அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும், அதிகார பகிர்வு சம்பந்தமாக அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி மாகாண சபை தேர்தல் நடத்தப்படவேண்டும், சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒழுங்குமுறை நாட்டின் ஏனைய பகுதி களிலும் நடைமுறைப்படுத்துவதையும் நாம் வரவேற்கின்றோம் என்ற கோரிக் கைகள் அடங்கிய செய்தியை ஜனாதி பதியிடம் தெரிவித்திருந்தோம்.

இந்த அடிப்படையிலேயே நாம் பேசலாம் என்று இருக்கும் அதேவேளை, இந்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் போதுதான் பேச்சுக்கு செல்ல முடியும் எனவும் கூறியிருக்கின்றோம்.

இதைவிட சட்டத்தில் உள்ள மாகாண சபை முறைமை அதிகாரங் களோடு பகிரப்படும்போதுதான் எங்களுக்கு தற்போது உள்ள பிரச்னை களை நிறுத்த முடியும் என்ற அடிப் படையில் மாகாணசபை தேர்தலை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ள சகல அதிகாரங்களோடும் நடத்த வேண்டும். அதிகாரங்கள் பகிரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் இந்த பேச்சில் முக்கிய இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கவுள்ளோம்.

இந்தப் பேச்சில் எமக்கு சந்தேகம் இருந்தாலும் பேச்சுக்கு சென்று எமது நிலைப்பாட்டை சொல்ல வேண்டிய கடப்பாட்டில் நாம் உள்ளோம்.

இதுவரை காலம் அரசாங்கங்களோடு இனப்பிரச்னை விடயத்தை பேசி வந்து நாம் ஏமாற்றப்பட்டவர்கள். இந்த பேச்சு தொடருமாக இருந்தால் இந்தியாவின் தலைமையில் அமெரிக்கா, பிரித்தானியா, கனடாவின் மேற்பார்வை இருக்க வேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கையாக இருக்கும் - என்றார். (ஐ)

# 2,400 கிலோ மஞ்சளுடன் இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், டிசெ. 13

மானிப்பாய் - சுதுமலை பகுதியில் வைத்து 2,400 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் பட்டா ரக வாகனத்தில் மஞ்சளை கடத்திச் சென்ற வேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-03)

# காற்று மாசடைவு மீண்டும் உயர்வு

கொழும்ப, டிசெ. 13

இந்தியாவின் வளி மாசடைவு கடந்த சில தினங்களாக இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த மாசடைவு படிப்படியாக குறைவடைந்த நிலையில், நேற்று திடீரென மாசடைவு உயர்ந்து காணப்பட்டது.

இந்த நிலைமை பெரியளவில் உடல் நலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்ற போதிலும், சுவாசம் தொடர்பான பிரச்னைகள் காணப்படுவோர் அவதானமாக செயல்பட வேண்டும் என்றும், மேலும் ஓரிரு நாட்களுக்கு இந்நிலைமை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Negombo, Western | 172 |
| 2 | Kandy, Central | 163 |
| 3 | Colombo, Western | 162 |
| 4 | Gampaha, Western | 144 |
| 5 | Ratnapura, Sabaragamuwa | 119 |
| 6 | Ambalantota, Southern | 105 |
| 7 | Dambulla, Central | 95 |
| 8 | Jaffna, Northern Province | 91 |
| 9 | Nuwara Eliya, Central | 61 |

சுவிற்சர்லாந்து நிறுவனத்தின் தரவின் படி, நேற்றைய தினம் நீர்கொழும்பு 172, கண்டி 163, கொழும்பு 162, கம்பஹா 144, இரத்தினபுரி 119 ஏ. கியூ. ஐ. என்ற அடிப்படையில் காணப்பட்டது.

இதேசமயம், யாழ்ப்பாணத்தில் காற்றின் தரம் 91 ஏ. கியூ. ஐ. என்ற அளவில் காணப்பட்டது. (ஐ)

## இளைஞனின்..

போதைப் பொருளுக்கு அடிமையான இந்த இளைஞன் இதய வால்வில் ஏற்பட்ட கிருமி தொற்று காரணமாக உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழரசு...

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் உத்தி யோகப்பற்றற்ற முறையில் பேசினார் என்றும், அவர்கள் அதற்கு சாதகமான நிலைப்பாட்டை தெரிவித்தனர் என்றும் கூறியிருக்கிறார் என்று அறிய வருகிறது. இந்த விடயம் தொடர்பில் பங்காளிக் கட்சிகளை தொடர்பு கொண்டபோது அவர்கள் தெரிவித்தவை வருமாறு,

ரெலோ கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசுவாமி:

தேர்தலில் எப்படி போட்டியிடுவது என்பது ஒவ்வொரு கட்சியின் சுதந்திரம். தாம் எப்படி போட்டியிடுவது என்பதை தமிழரசு கட்சிதான் தீர்மானிக்க முடியும். அவர்கள் எப்படி போட்டியிட்டாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து செயல்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடும் - என்றார்.

புளொட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன்:

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் பேசப்பட்ட விடயம் பற்றி செய்திகளை பார்த்து அறிந்தேன். ஒவ்வொரு கட்சியும் எப்படி தேர்தலை எதிர்கொள்வது என்பது பற்றி முடிவெடுக்கும் சுதந்திரம் உள்ளது. அது தமிழரசு கட்சிக்கும் உள்ளது. என்றாலும், இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்கள் யாரும் அந்த யோசனையை இதுவரை எம்மிடம் தெரிவிக்கவில்லை - கலந்துரையாடவில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மேலும் பலப்படுத்தி, தமிழ் மக்களை ஓரணிப்படுத்தவே நாம் தொடர்ந்து முயன்று வருகிறோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையையே மக்கள் வலியுறுத்தி வருகிறார்கள். என்றாலும், தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுவது என்பது விரும்பத் ஒதகாத - துரதிர்ஷ்டவசமான முடிவை எடுத்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயலிழந்து விடுமென மக்கள் அச்சமடைய தேவையில்லை. நாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தொடர்ந்து செயல்படுவோம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகவே தேர்தல்களில் போட்டியிடுவோம் - என்றார். (ஐ)

## ஈ.பி.டி.பி...

- துணவி பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையின் சுற்றிவளைப்பில் கைதான நபர் ஆயு தங்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த வட்டுக்கோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## வடக்கு...

பெரமுன ஜனாதிபதியுடன் இணக்கப்பாடு ஒன்றை எட்டியுள்ளது.

எனினும், வடக்கு மாகாணம் உட்பட நான்கு மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்களை நியமிக்க முடிவு எட்டப்பட்டுள்ளது. ஆனாலும், புதிய ஆளுநர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களின் விவரங்கள் வெளியிடப்பவில்லை. (ஐ)

## சகல...

கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் கட்சிகள், க. வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, டக்ளஸ் தேவானந்தாவின் ஈ. பி. டி. பி., பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில் இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகள் பங்கேற்கவுள்ளன.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அந்தக் கட்சி இந்தச் சந்திப்பில் பங்கேற்காது என்று அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இதனிடையே, சிறுபான்மை கட்சிகளுடனான இந்தப் பேச்சில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் இந்த சந்திப்பில் பங்கேற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

மட்டு. ஈழநாடு
Eelanadu
49/D/2, மாமாங்கம் கோவில் வீதி,
மாமாங்கம், மட்டக்களப்பு
தொ.பே.: 065 2052 955

# இந்தியா - பாகிஸ்தான் இடையே கிரிக்கெட் உறவு இருக்காது?

## இந்திய வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, டிசெ. 13

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கிரிக்கெட் உறவு குறித்து இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

வரும் 2023ஆம் ஆண்டுக்கான ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது. இதையடுத்து, இந்த ஆசிய கோப்பை தொடருக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்லாது என்று பி. சி. சி. ஐ. செயலாளர் ஜெய் ஷா அண்மையில் அறிவித்திருந்தார். மேலும் ஆசிய கோப்பை தொடர், நடுநிலையான ஓர் இடத்தில் நடைபெறும் என்றும் கருத்து தெரிவித்திருந்தார்.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பி. சி. சி. ஐ. மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு இடையே பெரும் வார்த்தைப் போர் வெடித்தது. இதையடுத்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ரமீஸ் ராஜா, 'பாகிஸ்தானில் நடைபெற இருக்கும் ஆசிய கோப்பை தொடரில் பங்கேற்பதற்காக, இந்திய அணி வரவில்லை என்றால், அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெற இருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரை பாகிஸ்தான் புறக்கணிக்கும்' என்று பதிலளித்தார்.

இந்நிலையில், இதுகுறித்து பேசிய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், "இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இது ஒரு சிக்கலான பிரச்னை. நான் உங்கள் தலையில் துப்பாக்கியை வைத்தால் நீங்கள் என்னிடம் பேசுவீர்களா?

திறந்த வெளியில் உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் பயங்கரவாதத்துக்கு உதவினால், அங்கே தலைவர்கள் யார், முகாம்கள் எங்கு இருக்கின்றன என்பதில் எந்த





மர்மமும் இல்லை. எல்லை தாண்டிய பயங்கரவாதம் சாதாரணமானது என்று நாம் நினைக்கவே கூடாது. மறைமுகமாக பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு உதவுகிறது.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் உரிமை ஒரு நாட்டிற்கு உண்டு என்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. பாகிஸ்தான் மீது உலகளாவிய அழுத்தம் இருக்க வேண்டும். பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குரலெழுப்பாத வரையில், அவர்களுக்கு அழுத்தம் கொடுக்க இயலாது. எனவே, இதனை இந்தியாதான் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஏனென்றால் நமது இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது" என்று தெரிவித்தார். இதன்மூலம், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு தொடர்கள் நடைபெறாது என்பதை இந்தியா தெளிபடுத்தியுள்ளது. (ஐ)

# கண்டியை வீழ்த்தியது காலி கிளாடியேற்றர்ஸ்





அம்பாந்தோட்டை, டிசெ. 13

கண்டி பல்கன்ஸ் அணியை காலி கிளாடியேற்றர்ஸ் 12 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

எல். பி. எல். இருபது - 20 தொடரில் நேற்று நடந்த போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ், கண்டி பல்கன்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய காலி அணிக்கு தொடக்க வீரர் தனுக டபர் அதிரடி கொடுத்தார். ஆனால், அவருக்கு துணையாக எவரும் நிலைத்து ஆடவில்லை. ஐந்தாவது வீரராக களமிறங்கிய நுவநிந்து பெர்னாண்டோவே அவருக்கு இணைப்பாட்டம் வழங்கினார்.

தனுக டபர் 70 ஓட்டங்களுடனும், நுவநிந்து பெர்னாண்டோ 56 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு காலி 153 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கண்டி அணியின் பந்துவீச்சில் பிராத்வெயிட் 3, இசுறு உதான 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

கண்டி அணிக்கு தொடக்கம் கொடுத்த பதும் நிஷங்க 29 ஓட்டங்களையும் அஷேன் பண்டார 41 ஓட்டங்களையும் சாமிக கருணாரத்ன 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

எனினும், ஏனைய வீரர்கள் பங்களிக்காததால் அந்த அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 141 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இதனால், 12 ஓட்டங்களால் காலி அணி வெற்றி பெற்றது. காலி அணியின் பந்துவீச்சில் நுவான் துஷார, லக் ஷன் சந்தகன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடர் இங்கிலாந்து வசம்!



முல்தான், டிசெ. 13

பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் அணி. இந்தத் தோல்வியின் மூலம் நடப்பு ஆண்டில் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்துள்ளது பாகிஸ்தான்.

பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி, பாகிஸ்தான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளும் கடந்த 9ஆம் திகதி தொடங்கிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடின. இந்தத் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றிருந்தது.

முல்தான் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில்வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இங்கிலாந்து அணி 281 ஓட்டங்களும், பாகிஸ்தான் 202 ஓட்டங்களும் முதல் இனிங்ஸில் எடுத்தன. தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் 275 ஓட்டங்கள் எடுத்தது இங்கிலாந்து. அந்த அணி சார்பில் ஹாரி ப்ரூக் 108 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

அதன் காரணமாக 355 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இரண்டாவது இனிங்ஸில் பாகிஸ்தான் அணி விரட்டியது. இந்த இலக்கை துரத்தி வென்றால் பாகிஸ்தான் அணி வரலாறு படைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 328 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது அந்த அணி. அதிகபட்சமாக ஷகில் 94 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

நேற்று ஆட்டம் தொடங்கியபோது பாகிஸ்தான் அணி வெற்றி பெற 157 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது. இங்கிலாந்து அணி வெற்றி பெற 6 விக்கெட்கள் தேவைப்பட்டது. இரு அணிகளும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டன. இறுதியில், அந்த முயற்சியில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி கிட்டியது.

ரொபின்சன், அண்டர்சன் மற்றும் மார்க் வூட் என மூவரும் சிறப்பாக பந்து வீசி இருந்தனர். இரண்டாவது இனிங்ஸில் மார்க் வூட் 4 விக்கெட்களை வீழ்த்தி இருந்தார். இந்த வெற்றியின் மூலம் 22 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தான் மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றுள்ளது இங்கிலாந்து. இந்தத் தொடரில் தோல்வியை தழுவியுள்ளதால் 2021-23 ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இங்கிலாந்து 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. மூன்றாவது போட்டி வரும் 17ஆம் திகதி தொடங்க உள்ளது.

# பங்களாதேஷுடனான டெஸ்ட் இந்தியாவின் ரோஹித் விலகல்

புதுடில்லி, டிசெ. 13

இந்திய அணி 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளது.

இரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பங்களாதேஷ் 2-1 என கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் சட்டோகிராமில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், முதல் டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா கையில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு பதிலாக அபிமன்யு ஈஸ்வரன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகை தலைப்பு செய்தி
07.45 மணி: வானிலை அறிக்கை
07.50 மணி : பல்சுவை நிகழ்ச்சி
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.00 மணி : தொடர் நாடகம்
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : யூலியா யும் காணா-நேரலை

**பகல்**
1.00 மணி : வழிப்போக்கன் ( மறு ஒளிபரப்பு )




1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படக்காட்சிகள்
04.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : கலோ கோடம்பாக்கம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : குறுந்திரை நேரம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



7.30 மணி : சாட்சியம் - மீண்டும் ஆரம்பித்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச பயணிகள் விமானசேவை



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு